157

சிவ்யார்த்த தீபிகை

28.3.1938

12 9

SL
0229 211, N26
N38-12.9
159928

26

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்,

மாதந்தோறும் வெளிவரும்

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய பத்திரிகை.

ஸம்புடம் 12] [நெம்பர் 9.

திவ்யார்த்த தீபிகை.

ஆசிரியர் :

ஸ்ரீகாஞ்சீ. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர்.

28—3—1938

விஷயஸூசிகை.

1. திருவாய்மொழி உரை 3 பாரம்.
2. ஆசார்யஹ்ருதயவ்யாக்யானம் 1 பாரம்.

சென்னை நியூமன் அச்சுக்கூடம்.

விலை அணா 5] 1937 [தபால் சார்ஜ் தனி

இந்த தீபிகை கிடைக்குமிடங்கள் :—

நியூமன் பிரஸ், 19, டேவிட்ஸன் தெரு, ஜி. டி. மதராஸ்.
A. கிருஷ்ணஸாமி ஐயங்கார், 45, மௌபரீஸ் ரோட், மைலாப்பூர்.
G. ரங்கய்ய நாயுடு, 36, சாமிநாய்க்கன் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, மதராஸ்.

Printed & Published by T. Narayanaswami Naidu at Newman Press, 19, Davidson St., Madras.

JUN 1978

என்றைக்கோ கழிந்துபோன எம்பெருமான்படிகளை அக்காலத்திற்போலவே இன்று அனுபவிக்கப்பெறவேணும் என்கிற விடாய் பிறந்தது; அப்படிப்பட்ட படியே கிடையாமையாலே, எம்பெருமானோடு கலந்து பிரிந்[illegible]ரு பிராட்டியின் நிலைமையை யடைந்து தான் மோஹித்துக்கிடக்க, அவ்வப்படியை [illegible] அனுஸந்தித்த திருத்தாயார் பெண் பிள்ளையின் நிலைமையைப் பேசு[illegible] முகத்தாலே ஸ்வதசையை வெளியிடுவதாய்ச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

பீமஸேநன் ஒருகால் திருவடியைக் கண்டபோது [illegible] என்றான்; (அதாவது) 'நீ முன்பு கடல்கடந்த வடிவை நான் இப்போது காண விரும்புகின்றேன்; காட்டவேணும்' என்றான். அப்படிக் காட்டவல்ல சக்தி மாருதிக்கு உண்டு என்று அறிந்தபடியாலே அங்ஙனம் அபேக்ஷித்தான்; அப்படியே ஆழ்வாரும் எம்பெருமானுடைய சக்தியை அறிந்தவராதலாலும் தம் அவாவின் மிகுதியாலும் என்றைக்கோ கடந்துபோனவற்றையும் இன்று காணப்பெற விரும்புவது பொருந்தியதே யென்ப. ... ... (*)

பாலனாய் ஏழுலகுண்டுபரிவின்றி *
ஆலிலை அன்னவசஞ்செய்யுமண்ணலார் *
தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே
மாலுமால் * வல்வினையேன்மடவல்லியே. (க)

பாலன் ஆய்	சிறு குழவியாகி	தண் அம்	குளிர்ந்தழகிய
பரிவு இன்றி	அநாயாஸமாக	துழாய் என்றே	திருத்துழாய்மாலை யென்றே வாய் வெருவிக்கொண்டு
ஏழ் உலகு உண்டு	ஏழுலகங்களையும் திரு வயிற்றிலே வைத்து		
ஆல் இலை	ஆலந்தளிரிலே	வல் வினையேன் மட வல்லி	வலிய பாபத்தைப் பண்ணின என்னுடைய இளங்கொடிபோன்ற மகள்
அன்னவசம் செய்யும்	நித்திரை செய்தருளின		
அண்ணலார்	ஸ்வாமியினுடைய		
தாள் இணை மேல்	உபய பாதங்களின்மீது	மாலும்	வ்யாமோஹிக்கின்றாள்;
அணி	சாத்தப்பெற்ற	ஆல்	அந்தோ!.

* * * [பாலனாய்.] பண்டு ஆலிலையில் பள்ளிகொண்ட எம்பெருமானுடைய திருவடிகளிலே சாத்தின திருத்துழாயை இப்போது பெறவேணுமென்று என் மகள் [பராங்குசநாயகி] ஆசைப்படுகின்றாளென்று திருத்தாயார் கூறுகின்றாள். இவ்வுலகமெல்லாம் பிரளய வெள்ளத்தில் அழுந்தி அழியப்புகுங்கால் எம்பெருமான் இவற்றையெல்லாம் தனது திருவயிற்றிலே வைத்து ஒரு சிறிய ஆலந்தளிரிலே கண்வளர்ந்ததாக நூற்கொள்கை அது என்றைக்கோ நடந்த விஷயம். அப்போது அந்த வடதளசாயிப் பெருமானுடைய தாளிணை மேலணிந்த தண்ணந்துழாய்மாலையை இப்போது என்மகள் அபேக்ஷிக்கின்றாளே யென்கிறாள்.

பாலனாய் என்ற சொல்லாற்றலால் நம்பிள்ளை அருளிச் செய்வதாவது—"பருவம்நிரம்பின பின்பு லோகத்தை யெடுத்து வயிற்றிலே வைத்து ஆலிலையிலே சாய்ந்தானாகில் என் மகள் இப்பாடுபடாள் கிடீர்" என்பதாக. வயது சென்றவனாயிருந்து இவ்வருந்தொழில் செய்தால் அவ்வளவாக ஈடுபடவேண்டியிராது; பச்சைப்பசுங் குழந்தையாயிருந்து கொண்டு செய்த செயலாகையாலே ஈடுபாடு மிக்கது போலும்.

"பாலனாயேழுலகுண்டு" என்ற சொற் சேர்க்கையில் ஒரு பொருளின்பம் காட்டுகிறார் நம்பிள்ளை; அதாவது—சிறு குழந்தைகளின் கையிலே எது கிடைத்தாலும் சடக்கென எடுத்து வாயிலே போட்டுக் கொள்வது இயல்வாதலால் ஆலிலைப் பாலகனும் ஏழுலகுண்டது புத்திபூர்வகமாகவன்று; பிள்ளைத்தனத்திற்கு ஏற்ப 'இது ஸாத்மிக்கும், இது ஸாத்மியாது' என்று அறியாதே உலகங்களை வாயிலிட்டுக் கொள்ள, ரக்ஷகனுடைய வியாபாரமாகையாலே அது ரக்ஷணமாய் முடிந்ததாம்.

பரிவுஇன்றி = பரிவாவது வருத்தம்; சிறிதும் ஆயாஸமில்லாமல் மிக எளிதாகச் செய்தமை சொன்னபடி.

அன்னவசம்செய்யும் = வயிற்றினுள் அன்னம் சென்றவாறே பரவசமாகக் கண்ணுறங்கிப்போவது உலகவியற்கையாதலால் நித்திரைக்கு அன்னவசம் என்று பெயரிடப்படுகின்றது போலும். எம்பெருமானும் ஏழுலகங்களையுண்டதனால் உடனே நித்திரையுண்டாகத் தட்டில்லையே.

இவ்விடத்தில் ஈட்டுஸ்ரீஸூக்தி காண்மின்;— "[அன்னவசம்செய்யும்] தன்வசமாகவன்றிக்கே * அஹமந்நம் என்கிற அன்னத்துக்கு வசமாக." என்பதாம். முக்திதசையில் அஹமந்நம் என்று சொல்லுகிறவர்கள் சேதநர்கள்; அவர்களெல்லாரும் பிரளயகாலத்தில் திருவயிற்றினுள்ளடங்கி மெய்யாகவே அன்னமாக ஆய்விட்டபடியை அழகாக அருளிச் செய்தபடி.

அண்ணலார் தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே = "தோளிணை மேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடி மேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மான்" என்கிறபடியே திருமுடி திருத்தோள் திருமார்பு முதலிய இடங்களிலும் திருத்துழாய்மாலை அணிவது உண்டாகிலும் அடியே பிடித்து அடிமை விடாதவிவளுக்குத் தாளிணைமேலணி தண்ணந்துழாயொழிய வேறொன்றிலும் நெஞ்சு செல்லாதாகையாலே அதனையே வாய்வெருவுகிறபடி.

தண்ணந்துழாயென்றே = 'பாலனாய் ஏழுலகுண்டதும் ஆலிலையன்ன வசஞ் செய்ததும் எப்போதோ கழிந்ததாயிற்றே! அப்போதணிந்த திருத்துழாய்மாலை இப்போது கிடைக்கவழியில்லையே!' என்று எவ்வளவு சொன்னாலும் கேளாமல் மீண்டுமீண்டும் அதனையே வாய்வெருவுகின்றாளென்றபடி.

என்[illegible]ல் = திருத்துழாய் திருத்துழாயென்று வாய் வெருவுவதோ[illegible]லையே! [illegible]ளமும் குலையாநின்றாளே! என்கிறாள். இங்கே

15992 8

N32 1927 [illegible]

ஈட்டுஸ்ரீஸூக்தி காண்மின்;— "மணிப்பாவையிலே அக்நிபுத்தி பிறந்தால் அது பின்னைச் சுடவும் வேணுமோ?" என்பதாம். உலகத்தில் மணியொளியிலே சிலர்க்கு நெருப்பு என்கிற ப்ரமம் உண்டாகலாம்; இங்ஙனே ப்ரமம் உண்டானதற்காக அவ்வஸ்துவானது அக்நியின் கார்யமான சுடுகையைப் பண்ணமாட்டாது; சுடுமாகில் ஆச்சரியப்பட வேண்டியதேயாகும். அதுபோல இங்குங் காண்க: * ஆலிலையன்ன வசஞ்செய்யு மண்ணலாருடைய தாளிணைமேலணி தண்ணந்துழாய்மாலை யென்பது இப்போது இல்லாத வஸ்துவே; அதனை வாயாற் சொல்வது ப்ரமத்தின் காரியமாக இருக்கட்டும்; 'மாலுமால்' என்னும்படி வியாமோஹமும் உண்டாகிறதே! என்ன ஆச்சரியமிது; என்றபடி ... (க)

வல்லிசேர்நுண்ணிடை ஆய்ச்சியர்தம்மொடும் *
கொல்லைமைசெய்து குரவைபிணைந்தவர் *
நல்லடிமேலணி நாறுதுழாயென்றே
சொல்லுமால் * சூழ்வினையாட்டியேன்பாவையே (உ)

சூழ் வினை யாட்டியேன்	மிகுந்த தீவினையையுடையேனாகிய என்னுடைய	கொல்லைமை செய்து	வரம்புகடந்த செயல்களைச் செய்து
பாவை	பதுமை போன்ற பெண்ணானவள்,	குரவை பிணைந்தவர்	ராஸக்ரீடை செய்த கண்ணபிரானுடைய
வல்லி சேர்	கொடிபோன்ற	நல் அடி மேல் அணி	அழகிய திருவடிகளின் மீது சாத்தின
நுண்	நுட்பமான	நாறு துழாய் என்றே	நறுமணம் மிக்க திருத்துழாயென்றே
இடை	இடுப்பையுடைய	சொல்லும்	சொல்லுகின்றாள்;
ஆய்ச்சியர் தம்மொடும்	கோபிமார்களோடுகூடி	ஆல்	அந்தோ!.

* * * [வல்லிசேர்.] கண்ணபிரான் ஆய்ச்சிகளோடுகூடிக் குரவை கோத்த காலத்துத் திருவடியிலணிந்து கொண்டிருந்த திருத்துழாய்மாலையை என்மகள் வாய் வெருவுகின்றாளென்கிறாள். குரவை யென்பது ராஸக்ரீடை யெனப்படும். "ஸம நாஸம நாஜ்ஞரெ ஊயவ: ஊயவஂஊயவஂ வாஜுரெணாஂமநா" என்கிறபடியே ஒவ்வொரு ஆய்ச்சியின் பக்கத்திலும் ஒவ்வொரு கண்ணனாகப் பல திருவுருவங்கொண்டு கைகோத்தாடினது வடமொழியில் ராஸக்ரீடை யென்றும், தென்மொழியில் குரவைக்கூத்தென்றும் வழங்கப்பெறும்.

வல்லிசேர்நுண்ணிடையாய்ச்சியர் = 'வல்லிசேர்' என்பதை இடைக்கு விசேஷணமாக்குதலுமுண்டு; ஆய்ச்சியர்க்கே விசேஷணமாக்குதலுமுண்டு; முந்தினபக்ஷத்தில், கொடிபோன்ற இடையை யுடையவர்களென்னுதல்; பிந்தின பக்ஷத்தில் கொடிபோன்றவர்களாயும் நுட்பமான இடையை யுடையராயுமிருக்கின்ற ஆய்ச்சிகளென்னுதல்.

கொல்லைமை = வரம்புகடந்த செயல்; 'கொல்லை' என்னும் சொல்லின்மீது மைவிகுதி ஏறிக்கிடக்கிறது. "கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட" என்ற ஆண்டாள் பிரயோகமும் "கொல்லை யென்பர் கொலோ" என்ற [illegible] ஆழ்வார் பிரயோகமும் காணத்தக்கன. கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில்

“யஏத-ஆயிதம் தவஹவி யதிஞ ஸாவஸெரஷ்டாடி—ஆர்த்தாயிதம் தவ ஹவி யத் கில ராஜகோஷ்டயாம்” என்றதில் தார்த்தாயிதம் என்றதுவே கொள்ளை மையாகும்.

பாவை= பதுமைக்குப் பெயர்; உவமையாகு பெயராய்ப் பெண் பிள்ளையை யுணர்த்தும். ... ... (உ)

பாவியல்வேத நன்மாலைபலகோண்டு *
தேவர்கள்மாமுனிவர் இறைஞ்சநின்ற *
சேவடிமேலணி செம்போன்துழாயேன்றே
கூவுமால் * கோள்வினையாட்டியேன்கோதையே. (ரு)

பா இயல் வேதம்	சந்தஸ்ஸுக்கள் பொருந்திய வேதங்களாகிற	செம் பொன் துழாய் என்றே	செவ்வியதாய் விரும்பத்தக்கதான திருத்துழாயென்றே
நல் பல மாலை கொண்டு	திவ்யமான பல மாலைகளைக் கொண்டு	கூவும்	கூப்பிடா நின்றாள் (யாரென்னில்)
தேவர்கள்	தேவர்களும்		
மா முனிவர்	மஹா முநிகளும்	கோள் வினை யாட்டியேன்	வலிய பாபத்தைப் பண்ணினவளான என்னுடைய
இறைஞ்ச நின்ற	ஆராதிக்கும்படி (உலகங்களை யளந்து) நின்ற		
சே அடி மேல்	திருவடிகளின் மேலே	கோதை	சிறந்த கூந்தலையுடையளான பெண்பிள்ளை.
அணி	அணிந்த		

* * * [பாவியல்வேதம்.] உலகளந்தருளின எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாயை என்மகள் ஆசைப்படா நின்றாளென்கிறாள். மூலத்தில் “தேவர்கள் மாமுனிவரிறைஞ்சநின்ற சேவடி” என்றிவ்வளவே யுள்ளது: “உலகளந்த திருவடி” என்று வ்யக்தமாக இல்லை; “பாற்கடல் சேர்ந்த பரமனுடைய அழகிய திருவடிகளிலே அணிந்த செம்பொற்றுழா யென்று இவள் கூப்பிடா நிற்கின்றாள்” என்றருளிச் செய்தார் ஆறாயிரப்படியில் பிள்ளான். மற்ற வியாக்கியானங்களில்—“உலகளந்தருளினவன் திருவடிகளில் திருத்துழாயை ஆசைப்படா நின்றாளென்கிறாள்” என்றுள்ளது.

பா இயல் வேதம்= பா என்று சந்தஸ்ஸுக்களைச் சொல்லுகிறது. காயத்ரீ, த்ரிஷ்டுப், அநுஷ்டுப், ஜகதீ என்றிப்படி பலவகைப்பட்ட சந்தஸ்ஸுக்கள் ப்ரஸித்தங்கள். ஒருபாதம் இத்தனை அக்ஷரங்கள் கொண்டிருந்தால் இன்ன சந்தஸ்ஸு என்று நியதியும் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட சந்தஸ்ஸுக்களிலே வர்த்திப்பதான வேதவாக்கியங்களையும் திவ்யமான மாலைகளையுங்கொண்டு தேவர்களும் ஸநகஸநந்தநாதி மஹர்ஷிகளும் ஆராதிக்கும்படி லோகத்தையளந்து நின்ற செவ்விய திருவடிகளின்மேலே சாத்தப்பட்ட திருத்துழாயையே சொல்லிக் கூப்பிடாநின்றாள்; அதாவது, ‘அந்தத் திருத்துழாய் வேணும், அந்தத் திருத்துழாய் வேணும்’ என்று அதுவே வாய்வெருவுதலாக இராநின்றாள். அந்தவஸ்து இப்போது கிடைக்கமாட்டாதது என்பதை அந்தோ! அறிகின்றிலள்—என்றாளாயிற்று.

கோள்வினையாட்டியேன் என்று சொல்லிக்கொள்ள வேண்டும்படி இங்கு என்ன விஷயமுள்ளது? தன்மகள் இங்ஙனே வாய் வெருவுவது புண்ய பலன் என்று நினைக்கத்தட்டில்லையே; “ப்ரபலமான பாபத்தைப்பண்ணின என்னுடைய மகள்” என்று சொல்லிக் கொள்வானேன்? என்று சங்கை பிறக்கும்; எதிர்மறையிலக்கணையால் இதற்குப் பொருள் கொள்ளவேணும். பகவத்விஷயத்திலே இவ்வண்ணம் ஈடுபட்ட பெண்பிள்ளையைப் பெற்ற என்னுடைய பாக்கியமே பாக்கியம் என்று சொல்லிக்கொள்வதே தாற்பரியமாகும். அன்றியே, தாய் என்பது உபாயாத்யவஸாயஸ்தானமாதலால் மகளுடைய பதற்றத்தைக் கண்டு வருத்தப்பட்டுச் சொல்லுகிற பாசுரமாகவே தாய் பாசுரம் அமைகின்றபடியால் “வல்வினையேன்” என்றும் “கோள்வினையாட்டியேன்” என்றும் தன்னைச் சொல்லிக் கொள்வதும் பொருந்தும் என்னலாம்.

கோள்வினை— முடித்தல்லது விடாத பாபம். அநுபவித்தே அற வேண்டிய பாபம் என்னவுமாம்.

கோதை என்று மயிர்முடிக்கும் பூமாலைக்கும் பெயர். சிறந்த மயிர்முடியை யுடையவள் (அல்லது) அழகிய பூமாலையை யணிந்தவள் என்கிற பொருளில் இங்குக் கோதை என்ற சொல் பிரயோகிக்கப்பட்டுள்ளது; ஆகு பெயர்.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் இன்சுவை மிக்கவை;—“தன் மாலையையும் மயிர் முடியையும் கண்டார் படுமத்தைத் தான்படுவதே!. இம்மாலையையுடைய இவள் வேறொருமாலையை ஆசைப்படுவதே!. * மார்வத்து மாலையானவிவள் வேறொரு மாலையை ஆசைப்படுவதே!. மார்வத்து மாலைக்கு மால் அவன்; அம்மாலுக்கு மால் இவள்.” ... ... (ரு)

கோதிலவண்புகழ் கோண்டுசமயிகள் *
பேதங்கள்சோல்லிப் பிதற்றும்பிரான்பரன் *
பாதங்கள்மேலணி பைம்போன்துழாயேன்றே
ஓதுமால் * ஊழ்வினையேன் தடந்தோளியே. (௬)

ஊழ் வினையேன்	பெரும் பாவத்தை யுடையேனாகிய எனது	பிதற்றும் பிரான்	பிதற்றும்படியாகவுள்ள ஸ்வாமியான
		பரன்	பரம புருஷனுடைய
தட தோளி	பெருந் தோள்களை யுடையளான பெண் பிள்ளை,	பாதங்கள் மேல்	திருவடிகளின் மேலே
சமயிகள்	சமயவாதிகள்	அணி	(நித்ய முக்தர்கள்) சாத்தின
கோது இல	குற்றமற்ற		
வண் புகழ் கொண்டு	விலக்ஷணமான குணங்களைக் கொண்டு	பைம் பொன்	பசும்பொன்போல் விரும்பத்தக்க
பேதங்கள் சொல்லி	தாம்தாம் பற்றிய குணங்களின் ஏற்றங்களைச் சொல்லி	துழாய் என்றே ஓதும்	திருத்துழாயென்றே சொல்லுகின்றாள். (ஆல்—அந்தோ.)

* * * [கோதில்வண்புகழ்.] திருநாட்டி லெழுந்தருளி யிருக்கிற பராத்பரனுடைய திருவடிகளில் திருத்துழாயை என்மகள் ஆசைப்படாநின்றாளென்கிறாள்.

முன்னிரண்டடிகள் பரமபதநாதனை வருணிப்பன. எம்பெருமானது திருக்குணங்களிலே புகுந்துவிட்டால் ஒவ்வொரு குணத்தினுடைய அதிசயமும் எல்லை காண வொண்ணாததாயிருக்கும்; பரத்வத்திற்கு ஈடான குணங்களும் ஸௌலப்யத்திற்கு ஈடான குணங்களுமாக வகுக்கப்பட்டுள்ள குணங்களிலே ஒருவர் ஒரு குணத்தை அநுபவித்து அதன் அருமைபெருமைகளை யெடுத்துரைத்துக் கொண்டாட, இங்ஙனே வாதவிவாத கலஹங்கள் ஏற்பட்டுவிடும்; இத்தகைய குணாநுபவவிவாதமேயாய்ச் செல்லுமாம் பரமபதத்தில். "பிணங்கியமரர் பிதற்றுங் குணங்கெழு கொள்கையினானே" என்று (1-6-4) ஸ்ரீ்மாமருளிச் செய்யப்பட்டது.

சமயிகள் என்றது—ஒவ்வொரு குணத்தின் அநுபவத்திலே ஊற்றமுற்று அதைப் பெருமைப்படுத்திச் சொல்வதையே தமது மதமாகக் கொண்டவர்கள் என்றபடி. உபநிஷத்துக்களில், தஹரவித்யை உபகோஸலவித்யை சாண்டில்ய வித்யை அக்ஷிவித்யை வைச்வாநரவித்யை என்றிப்படி அநேக வித்யைகள் கூறப்பட்டுள்ளன; அவற்றிலே ஊன்றினவர்களைச் சொல்லுகிறதாகவும் அருளிச் செய்வர்கள்.

கோது இல வண்புகழ் = ஒரு குணத்தை யநுபவிக்கும்போது இன்னொரு குணத்திலே நெஞ்சு செல்லுமாகில் அது குணத்திற்குக் கோதாகும்; அஃதில்லாமை சொன்ன முகத்தால் ஒவ்வொரு குணமும் தனித்தனியே பரம போக்யமாக அநுபவிக்கலாம்படி ஸாரஸ்யம் மிக்கிருக்கின்றமை சொன்னபடி.

பேதங்கள்சொல்லி = பேதமாவது விசேஷம்; தாங்கள் அநுபவிக்கிற குணங்களுக்கு ஏற்றங்களைச் சொல்லி என்றபடி. சிலகுணத்தை யநுபவித்து 'இதுவும் ஒரு குணமே! இதுபோலேயோ வீரகுணம்' என்பர்களாம். ஆக இப்படி அநுபவிக்கலாம்படி மிடைந்த திருக்குணங்களை யுடையனான ஸ்ரீவைகுண்டநாதனுடைய திருவடிகளில் நித்யஸூரிகளும் முக்தர்களும் சாத்தின திருத்துழாயைப் பற்றியே இவள் பலகாலும் அலற்றுகின்றாளென்றதாயிற்று.

தோளிசேர்பின்னைபொருட்டு எருதேழ்தழீஇக்
கோளியார் * கோவலனார் குடக்கூத்தனார் *
தாளிணைமேலணி தண்ணந்துழாயென்றே
நாளுநாள் * நைகின்றதால் என்றன்மாதரே. (ரு)

என் தன் மாதர்	எனது பெண்பிள்ளை.	தழீஇக் கோளியார்	தழுவிக்கொண்டவரும் [அதாவது-நிரஸித்தவரும்]
தோளி	அழகிய தோள்களை யுடையவளும்		
சேர்	அநுரூபையுமான	கோவலனார்	கோபால க்ருஷ்ணனாய் அவதரித்தவரும்
பின்னை பொருட்டு	நப்பின்னைப் பிராட்டிக்காக	குடம் கூத்தனார்	குடக்கூத்தாடினவருமான கண்ணபிரானுடைய
ஏழ் எருது	ஏழு எருதுகளையும்		

தாள் இணை மேல்	உபயபாதங்களின் மேலே	தண் அம் துழாய் என்றே	குளிர்ந்தழகிய திருத்துழாயென்றே சொல்லி
		நாளும் நாள்	நாள்தோறும்
அணி	சாத்தின	நைகின்றது	சிதிலையாகின்றாள்.

* * * [தோளிசேர்பின்னை] நப்பின்னைப் பிராட்டிக்காக எருதேழடர்த்த கண்ணபிரானுடைய திருவடிகளில் சாத்தின திருத்துழாய் விஷயமாகவே என் மகள் நைகின்றாளென்கிறாள்.

கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும் நீளாதேவியின் அம்ஸமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவளது தந்தை கந்யா சுல்கமாகக் குறித்தபடி ஒருவர்க்குமடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ்செய்து கொண்டனன் என்பது வரலாறு.

தோளி என்பதும் சேர் என்பதும் பின்னைக்குத் தனித்தனி விசேஷணங்கள். அழகிய தோளையுடையவளும் தனக்குத்தகுந்திருப்பவளுமான நப்பின்னை யென்றபடி.

"தழீஇக்கோளியார்" என்றவிது ஒரு முழுச் சொல்லு: தழுவிக்கொண்டவர் என்று பொருள். இதனை இரண்டு சொல்லாக மயங்கி 'எருதேழ் தழீ' என்று நிறுத்தி, 'கோளியார் கோவலனார்' என்று பாடஞ்செய்து வருவது பாங்கன்று.

'எருதுகளை முடித்தவர்' என்னவேண்டுமிடத்துத் தழுவினவர் என்றது மங்கலவழக்கு.

கோவலனார்— கோக்களை மேய்க்கவல்லவர் என்றபடி. குடக்கூத்தனார்—பிராமணர்க்குச் செல்வம் விஞ்சினால் யாகஞ்செய்வதுபோல இடையர்க்குச் செல்வம் விஞ்சினால் அதனாலுண்டாகும் செருக்குக்குப் போக்குவீடாக அவர்களாடுவதொரு கூத்து: தலையிலே அடுக்குக் குடமிருக்க இரு தோள்களிலும் இரு குடங்களிருக்க இரு கையிலும் குடங்களை யேந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து இது என்பர். இதனைப் பதினோராடலிலொன்றென்றும் அறுவகைக் கூத்திலொன்றென்றுங் கூறி "குடத்தாடல் குன்றெடுத்தோனாடல் அதனுக், கடைக்குபவைந்துறுப்பாய்ந்து" என்று மேற்கோளுங் காட்டினர் சிலப்பதிகாரவுரையில் அடியார்க்கு நல்லார்.

இப்படிப்பட்ட கண்ணபிரானுடைய திருவடிகளிற் சாத்தின திருத்துழாயையாயிற்று இவள் ஆசைப்பட்டது.

மாதர்—அழகு; அழகுடையவள். ... ... (ரு)

மாதர்மாமண்மடந்தைபொருட்டு ஏனமாய் *
ஆதியங்காலத்து அகலிடம்கீண்டவர் *
பாதங்கள்மேலணி பைம்பொன் துழாயென்றே *
ஓதுமாலெய்தினள் என்தன்மடந்தையே. (சூ)

மா மாதர்	சிறந்த அழகுடைய	பாதங்கள் மேல்	திருவடிகளின்மீது
மண் மடந்தை பொருட்டு	பூமிப் பிராட்டிக்காக	அணி	சாத்தின
ஆதி அம் காலத்து	முன்னொரு காலத்தில்	பைம் பொன் துழாய் என்றே	மிகவழகிய திருத்துழாயென்றே
ஏனம் ஆய்	வராஹ மூர்த்தியாய்	ஓதும் மால்	ஓதும்படியான வியாமோஹத்தை
அகல் இடம்	விபுலமான பூமண்டலத்தை	என் தன் மடந்தை	எனது பெண்பிள்ளை
கீண்டவர்	பிளந்தெடுத்துக் கொணர்ந்த பெருமானுடைய	எய்தினள்	அடைந்தாள்.

* * * [மாதர்மா.] ஸ்ரீ வராஹ மூர்த்தியாய் ப்ரளயார்ணவத்தில் பூமியை யெடுத்தருளினபோது திருவடிகளிலணிந்திருந்த திருத்துழாயைப் பெறவேணு மென்று ஆசைப்படுகின்றுளென் மகளென்கிறுள்.

ஹிரண்யகசிபுவின் உடன் பிறந்தவனை ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினுல் திருமால் மஹா வராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலி னுட்புக்கு அவ்வசுரனை நாடிக்கண்டு பொருது கோட்டினுற் குத்திக்கொன்று பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டினுற் குத்தி அங்குநின்று எடுத்துக் கொண்டுவந்து பழையபடி விரித்தருளினன் என்பது வராஹாவதார வரலாற்றுச் சுருக்கம். இப்பொழுது நடக்கிற ச்வேதவராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப்பற்றிய ப்ரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான பிரளய ஜலத்தில் முழுகியிருந்த பூமியை மேலே யெடுக்க நினைத்து மஹா வராஹரூபியாகிக் கோட்டு நுனியாற் பூமியை யெடுத்து வந்தன னென்ற வரலாறு முண்டு.

"ஆதிகாலத்து" என்னுமல் "ஆதியங்காலத்து" என்றதற்கு நம் பிள்ளை தாற்பரியமருளிச் செய்கிறுர்—"ரக்ஷகனுனவன் தன் விபூதி ரக்ஷணைத் துக்காகக் கொண்ட கோலத்தை அநுபவிக்கிற காலமாகையாலே அழகிய கால மென்கிறுர்" என்று.

"அகலிடங்கீண்டவர் பாதங்கள் மேலணி பைம்பொற்றுழாய்" என்கி றுரே; அகலிடங்கீண்டபோது திருவடிகளில் திருத்துழாய் அணியப் பெற்ற துண்டோ வென்னில், உண்டு: "உத்திஷ்டதஸ்தஸ்ய ஜலார்த்ரகுக்ஷேः மஹாவராஹஸ்ய மஹீம் ப்ரக்ருஹ்ய। விதூந்வதோ வேதமயம் சரீரம்

ரோமாந்தரஸ்தா முநயः ஸ்துவந்தி॥" உத்திஷ்டதஸ்தஸ்ய ஜலார்த்ரகுக்ஷேः மஹாவராஹஸ்ய மஹீம் ப்ரக்ருஹ்ய, விதூந்வதோ வேதமயம் சரீரம் ரோமாந் தரஸ்தாமுநயः ஸ்துவந்தி." என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் (1-4-29) கூறப் பட்டிருத்தலால் அப்போதும் ஸநகாதி மஹர்ஷிகள் இட்ட திருத்துழாய் உண்டு என்றுணர்க. மேற்காட்டிய ச்லோகத்தில் "ஸ்துவந்தி" என்று ஸ்துதியைச் சொல்லியிருப்பது புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பணத்திற்கும் உபலக்ஷணமாகும்.

இப்பதிகத்தில் பெரும்பாலும் பாசுரந்தோறும் "மாலுமால்" "கூவு மால்" "ஓதுமால்" "மடங்குமால்" "நம்புமால்" என்றிங்ஙனே வருகின்றது; இச் சொற்றொடர்களில் ஆல் என்பது அசையாகும். இப்பாசுரத்தில்மாத்திரம் ஓதுமால் என்ற சொற்றொடரில் ஆல் என்று இல்லை; 'ஓதும் மால்' என்று பிரியும்; ஓதும்படியான பைத்தியத்தை யடைந்தாளென்றபடி.

மடந்தை— மகளிர் பருவம் ஏழனுள் பதினுன்குமுதல் பத்தொன்பது வயதுவரையுள்ள பருவத்துப் பெண்; இச்சொல் பெண்பொதுப்பெயராகவே பெரும்பாலும் வழங்கும். .... (சூ).

மடந்தையை வண்கமலத்திருமாதினை *
தடங்கோள்தார்மார்பினில் வைத்தவர்தாளின்மேல் *
வடம்கோள்பூந்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
மடங்குமால் * வாணுதலீர்! என்மடக்கோம்பே. (எ)

வாள் நுதலீர்	ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்காள்!	வைத்தவர்	(பாற்கடல் கடைந்த காலத்து) ஏற்றுக் கொண்ட பெருமானுடைய
என் மட கொம்பு இவள்	இளங்கொடி போன்ற எனது இப்பெண் பிள்ளை,	தாளின் மேல்	திருவடிகளின் மீது (சாத்தின)
மடந்தையை	இளமைப் பருவமுள்ள	வடம் கொள்	செறியத் தொடுக்கப் பட்டதும்
வண் கமலம் திரு மாதினை	அழகிய தாமரைப்பூவிற் பிறந்த பிராட்டியை	பூ	அழகியதும்
தடம் கொள் தார் மார்பினில்	விசாலமானதும் மாலை யணிந்ததுமான திரு மார்பிலே	தண்ணம்	குளிர்ச்சி பொருந்தியது மான
		துழாய் மலர்க்கே	திருத்துழாயின் பொருட்டே
		மடங்கும்	சுருண்டு விழுகின்றுள்.

* * * [மடந்தையை.] அமுதமளிக்கக் கடல்கடைந்த காலத்துப் பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலே வைத்தருளின எம்பெருமானுடைய திருவடி களில் திருத்துழாயை என்மகள் ஆசைப்படுகின்றுளென்கிறுள்.

மூலத்தில், அம்ருதமதன காலமென்பதற்கு வாசகமான சொல் இல்லை யாகிலும் "திருமாதினை மார்பினில் வைத்தவர்" என்கிற சொல்லமைப்பை நோக்கி "அம்ருதமதநதசையிலே" என்று பூருவாசாரியர்கள் உரைத்

தருளினர். பிராட்டியைத் திருமார்பிலே கொண்டிருப்பவன் என்னாமல் 'வைத்தவர்' என்கையாலும், ஒவ்வொரு பாசுரத்திலும் ஒவ்வொரு அவதாரம் ப்ரஸ்துதமாகிவருகிற அடைவுக்குச் சேரவேண்டுகையாலும் இங்ஙனமுரைத்தல் மிகப்பொருந்தும்.

துர்வாஸமாமுனிவர் தாம் தேவேந்திரனுக்கு அன்புடன் அளித்திட்ட பூமாலையை அவன் அலக்ஷியஞ் செய்ததுகண்டு 'இப்படிச் செல்வச் செருக்குற்ற உன்னுடைய செல்வமெல்லாம் கடலில் ஒளிந்து போகக்கடவன' என்று சபிக்கவே அப்படியே போய்விட, அசுரர்வந்து பொருது அமரரை வென்றிட்டனர்: பிறகு தேவர்களெல்லாரும் திரண்டுவந்து எம்பெருமானைச் சரணமடைய, திருமால் திருவருள்கூர்ந்து கடல்கடைந்து அமுதமளித்து வாழ்வித்தனன் என்பது ப்ரஸித்தம். அப்போது முந்துறமுன்னம் காலகூட விஷம் கடலினின்று தோன்றிற்றாக, அதனை ஆர்க்குக் கொடுப்பதென்று பார்க்கையில் அக்ரதாம்பூலம் வேண்டிநிற்கும் சிவபிரானுக்கே கொடுப்பது தகுதியென்று துணிந்து அப்பிரானுக்கு அதனை உண்ணக் கொடுத்தபின் அக்கடலினின்று ஸ்ரீமஹாலக்ஷ்மி தோன்றி எம்பெருமானது திருமார்பிடத்து வந்துசேர அவளை மார்வகத்து இருத்தியருளினனென்க. "**திவ்யமால்யாம்பரதரா ஸ்நாதா பூஷணபூஷிதா। பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:**—திவ்யமால்யாம்பரதரா ஸ்நாதா பூஷணபூஷிதா, பஶ்யதாம் ஸர்வதேவாநாம் யயௌ வக்ஷஸ்ஸ்தலம் ஹரே:." என்ற ஸ்ரீ விஷ்ணுபுராண வசநம் இங்கே அநுஸந்தேயம். .... (எ)

கொம்புபோல்சீதைபொருட்டு இலங்கைநகர் *
அம்பெரியுய்த்தவர் தாளிணைமேலணி *
வம்பவிழ்தண்ணந்துழாய்மலர்க்கே இவள்
நம்புமால் * நானிதற்கென்செய்கேன்? நங்கைமீர்! (அ)

நங்கைமீர்	பெண்காள்!	அணி	சாத்தின
கொம்பு போல் சீதை பொருட்டு	பூங்கொடி போன்ற ஸீதாபிராட்டியின் பொருட்டு	வம்பு அவிழ் தண் அம் துழாய் மலர்க்கே	பரிமளப்ரசுரமாய்க் குளிர்ந்தழகிய திருத்துழாயின் மீதே
இலங்கை நகர்	இலங்காபுரியில்	இவள் நம்பும்	இவள் ஆசைப்படாநின்றாள்;
அம்பு எரி	அம்புகளில் நின்றும் கிளம்பும் அக்னியை	இதற்கு நான் என் செய்கேன்	இதற்கு நான் என்ன பரிஹாரம் செய்வது.
உய்த்தவர்	செலுத்தின இராமபிரானுடைய		
தாள் இணை மேல்	உபயபாதங்களின் மீது		

* * * [கொம்புபோல்சீதை.] ஸீதாபிராட்டிக்காக இலங்கை பாழாளாகப் படைபொருத பெருமானது திருவடிகளில் திருத்துழாயை என்மகள் விரும்பாநின்றாளென்கிறாள். கொம்புபோல்சீதைபொருட்டு= ஸ்த்ரீகளைக் கொம்பனார் என்று கூறுவது தமிழர் மரபு; வஞ்சிக்கொம்புபோல் மிக்க மென்மைத்தன்மை

பொருந்தியிருக்கும்படியைக் கூறியவாறு. கொம்புபோல் என்பதற்கு மற்றொரு பொருளும் நம்பிள்ளை அருளிச் செய்வதுண்டு; "**ஶாகா** என்கிறபடியே ஏக வஸ்துவில் ஏகதேசமென்னுதல்" என்பது ஈட்டு ஸ்ரீஸூக்தி. கொம்பானது வ்ருக்ஷத்தின் ஏகதேசமாகவுள்ளது; எம்பெருமான் "வாஸுதேவதரு" என்றும், "**ஸ்ரீஹஸ்தி ஶைலஶிகரோஜ்ஜ்வல பாரிஜாத:**" என்றும், "**கரிஶிகரிவிடங்கஸ்தாயி நஸ்ஸங்கவ்ருக்ஷ:**" என்றும் "**நிவாஸவ்ருக்ஷஸ்ஸாதூநாம்**" என்றும் "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றும் வ்ருக்ஷமாகச் சொல்லப்படுகிறபடியால் அதில் ஏகதேசமான கொம்பாகப் பிராட்டியைச் சொல்லுதல் பொருந்தும். "**ஶாகாம் தருஶாகாநாம் ம்ருதுஸம்ஸாரதாபஶிஶிரஜ்ஜ்வலவ ஸ்ரீஸ்வாமிநாகஹஸ்தி:**" என்ற பட்டர் ஸ்ரீஸூக்தியும் "**கல்பஜ்ஜ்யோதிக ந்யாவஜ்ஜீகஸ்யாஸி**" என்ற தேசிக ஸ்ரீஸூக்தியும் இக்கருத்துக்குத் துணை நிற்குமவை.

சீதை— ஸீதா என்ற வடசொல் திரிபு. "**ஸீதா லாங்கலபத்ததி:**" [ஸீதா லாங்கலபத்ததி:] என்ற நிகண்டின்படி உழுபடைக்கு ஸீதா என்று பெயராதலால் ஜநகசக்ரவர்த்தியின் யாகசாலை நிலத்தில் உழுபடை பட்டவிடத்தில் நின்றும் பிராட்டி தோன்றின காரணம்பற்றி அவளுக்கு இலக்கணையினால் ஸீதையென்று பெயராயிற்று.

நம்பும்— விரும்பும்; "நம்பும் மேவும் நசையாகும்மே."

"நான் இதற்கென்செய்கேன்" என்றவிடத்து ஈட்டு ஸ்ரீஸூக்தி:— "க்ருஷ்ணனைப்போலே ஊர்ப் பொதுவன்றிக்கே **ஏகதாரவ்ரத**னானவன் திருவடிகளில் திருத்துழாயை நான் எங்கே தேடும்படி? சொல்லவல்லீகோளே." .... (அ)

நங்கைமீர்! நீரும் ஓர்பெண்பெற்றுநல்கினீர் *
எங்ஙனேசொல்லுகேன்? யான்பெற்றவேழையை *
சங்கென்னும்சக்கரமென்னும் துழாயென்னும் *
இங்ஙனேசொல்லும் இராப்பகலென்செய்கேன்? (கூ)

நங்கைமீர்	மாதர்காள்;	சங்கு என்னும்	சங்கு என்கிறாள்;
நீரும்	நீங்களும்	சக்கரம் என்னும்	சக்கரமென்கிறாள்;
ஓர் பெண் பெற்று நல்கினீர்	ஒவ்வொரு பெண்ணைப் பெற்று அன்போடு வளர்த்திருக்கின்றீர்கள்;	துழாய் என்னும்	திருத்துழாயென்கிறாள்;
யான் பெற்ற	நான் பெற்றிருக்கின்ற	இராப் பகல்	இரவும் பகலும்
ஏழையை	இப்பேதையை	இங்ஙனே சொல்லும்	இப்படியே சொல்லுகின்றாள்;
எங்ஙனே சொல்லுகேன்	எப்படியென்று சொல்லுவேன்? (ஆகிலும் சொல்லுகிறேன்;)	என் செய்கேன்	யாது செய்வேன்?.

* * * [நங்கைமீர்நீரும்.] என் மகள் எம்பெருமானுடைய திவ்யாயுதங்களைச் சொல்லுவதாகத் தொடங்கி முற்றமுடியச் சொல்லமாட்டாதே இடையிடையே தளர்ந்து நோவுபடுகின்றாளென்கிறாள். பராங்குச நாயகியின் திருத்தாய் தனது தோழிமார்களை நங்கைமீர் என்று விளித்து 'நீங்களும் ஒவ்வொரு பெண் பிள்ளை பெற்று வளர்க்கிறீர்களே, என் பெண்மகளின் தன்மை உங்கள் பெண்களுக்கு உண்டோ?' என்றாள்; 'எங்கள் பெண்பிள்ளைகளிற்காட்டிலும் உன் பெண்பிள்ளைக்கு வாசி என்?' என்று அவர்கள் கேட்க, எங்ஙனே சொல்லுகேன்? என்கிறாள். இவள்படி பேச்சுக்கு விஷயமாகிலன்றோ நான் சொல்லுவது; "யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ" என்கிற பகவத்குணங்களை ஒருபடி பேசினாலும் குணங்களிலே ஆழ்ந்தவர்களின்படி பேச்சுக்கு நிலமன்றே; "அஹோ ஹரிதமோ நேத்ராம்ஸு: வாஸுதேவமநா த்வா: । ஸதா பரமஹநாவிஷ்டா: ரூபவத்ஸவவேத் ஹிஹி:— ஆநந்த லாதசிதநேத்ராம்பு: புலகீக்ருதகாத்ரவாந், ஸதா பரகுணாவிஷ்டோ த்ரஷ்டவ்யஸ் ஸர்வதேஹிபி:" என்கிறபடியே கண்டிருக்கலாமத்தனையல்லது பேசமுடியாதன்றோ என்கிறாள்.

ஆனாலும் பேசக்கூடியமட்டில் பேசலாகாதோ என்ன; பின்னடிகளால் பேசுகிறாள். சங்கு சக்கரம் திருத்துழாய் என்றிப்படி பகவத் வஸ்துக்களைச் சொல்ல நினைத்தவிவள் அவற்றை ஒரு சேர்த்தியாகச் சொல்லமாட்டாமல் 'சங்கு' என்று சொல்லி, அதுதான் மலையெடுத்தாப்போலே யிருக்கையாலே பெருவருத்தத்தோடே நின்று, மீண்டும் ஒருநாழிகை கழித்து 'சக்கரம்' என்று சொல்லி, அதன்பிறகு ஒருநாழிகை கழித்து 'துழாய்' என்று சொல்லி ஆக இப்பாடுபடா நின்றாள் என்கிறாள். .... (கூ)

என்செய்கேன்? என்னுடைப்பேதை என்கோமளம் *
என்சொல்லும் என்வசமுமல்லள்நங்கைமீர்! *
மின்செய்பூண்மார்பினன் கண்ணன்கழல்துழாய் *
பொன்செய்பூண்மென்முலைக்கென்று மெலியுமே. (கய)

நங்கைமீர்	பெண்காள்!	துழாய்	திருத்துழாயை
என்னுடை பேதை என் கோமளம்	பேதைத்தனமும் ஸௌகுமாரத்தன்மையும் பொருந்திய என்மகளானவள்	பொன் செய்	பசலை நிறம் பூத்ததும்
		பூண்	ஆபரணங்களணிந்ததும்.
என் சொல்லும் என் வசமும் அல்லள்	என் சொல்லிலும் நிற்பதில்லை, என் வசத்திலும் நிற்பதில்லை;	மெல்	பிரிவாற்றகில்லாததுமான
		முலைக்கு என்று	முலையில் அணிந்து கொள்ளவேணுமென்று விரும்பி
மின் செய் பூண் மார்பினன்	ஒளியைச்செய்கின்ற திருவாபரணமணிந்த திருமார்வையுடையவனை	மெலியும்	(அது கிடையாமையாலே) உடம்பு இளைக்கப்பெறுகிள்றாள்;
கண்ணன்	கண்ணபிரானுடைய	என் செய்கேன்	இதற்கு யான் யாது செய்வேன்?
கழல்	திருவடிகளிலுள்ள		

* * * [என்செய்கேன்.] கீழ்ப்பாட்டில் 'நங்கைமீர்!' என்று விளிக்கப்பட்ட நங்கைகள் பராங்குச நாயகியின் தாயை நோக்கி 'அம்மா! உன்மகள் நீயிட்ட வழக்கன்றோ; அவளுக்கு ஹிதம் சொல்லலாகாதோ?' என்ன, அவர்களுக்கு விடை கூறுகின்றாள்: அந்தோ! இப்பெண்பிள்ளை எனக்கு விதேயையன்றிக்கே கண்ணபிரானுடைய ஆபரண சோபையிலே அகப்பட்டு அவனது திருவடிகளில் திருத்துழாய் தன்முலைக்கு அலங்காரமாக வேணுமென்று உடம்பு இளைக்கின்றாளே! யென்கிறாள். 'அந்தோ! இவளுடைய நிலைமையை நோக்குங்கால் இவளை இழக்க நேரும்போல் தோன்றுகின்றதே!' என்ற கருத்தப்பட 'என்செய்கேன்' என்றது. நான் சொல்லும் ஹிதவசனம் கேட்கும் பருவமன்று என்பாள் 'என்னுடைப்பேதை' என்கிறாள். 'இவளையோ நாம் தண்டிப்பது' என்று இருக்கவேண்டும்படியான ஸௌகுமார்யமுடையவள் என்ற கருத்துப்பட 'என்கோமளம்' என்கிறாள்.

என்சோல்லுமல்லள், என்வசமுமல்லள்— நான் சொல்லும் ஹிதவசனம் கேட்பதுமில்லை, நான் ஹிதமுரைக்க நினைக்கும்படியான நிலைமையிலுமில்லை என்றபடி.

ஜ்வலிக்கின்ற கௌஸ்துபாபரணத்தைத் திருமார்பிலே அணிந்துள்ளவனை கண்ணபிரானது திருவடிகளிற்சாத்தின திருத்துழாய்மாலையே தனது முலைக்கு அலங்காரமாக வேணுமென்று ஆசைப்பட்டு அது கிடையாமையாலே மெலிகின்றாள்; இதுவே இவள்படி என்றாயிற்று.

பொன்செய்பூண்மென்முலைக்கு= பொன்மயமான ஆபரணங்கள் பூண்ட முலைக்கு என்கிற பொருளும், விரஹத்தாலே யுண்டான பசலைநிறம் பொருந்திய முலைக்கு என்றும் பொருள்படும்.

"மென்முலைக்கு வேணும்" என்று சொல்லத் தொடங்கி வினைமுற்றுக் கூறி முடிக்கமாட்டாதே இடையிலே மெலிந்து நின்றாளென்க. .... (க0)

மெலியும்நோய்தீர்க்கும் நம்கண்ணன்கழல்கள்மேல் *
மலிபுகழ் வண்குருகூர்ச்சடகோபன்சொல் *
ஒலிபுகழாயிரத்து இப்பத்தும்வல்லவர் *
மலிபுகழ்வானவர்க்காவர் நற்கோவையே. (கக)

மெலியும் நோய் தீர்க்கும்	மெலிவை விளைக்கும்படியான பிரிவுநோயைப் போக்கவல்லவனை	ஒலி புகழ்	கொண்டாடப்பட்ட குண பூர்த்தியையுடைய
		ஆயிரத்து	ஆயிரத்திலும்
நம் கண்ணன்	நமது கண்ணபிரானுடைய	இ பத்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
கழல்கள் மேல்	திருவடி விஷயமாக,	வல்லவர்	ஓதவல்லவர்கள்
மலி புகழ்	வளர்ந்த புகழையுடைய	மலி புகழ்	மிக்கபுகழையுடைய
வண் குருகூர் சடகோபன்	திருநகரிக்குத் தலைவரான ஆழ்வார்	வானவர்க்கு	நித்யஸூரிகளுக்கு
		நல் கோவை ஆவர்	நல்ல சேர்த்தியாவார்.
சொல்	அருளிச்செய்த		

* * * [மெலியுநோய்தீர்க்கும்.] இத்திருவாய்மொழி கற்றார் நித்யஸூரிகளோடு ஒரு கோவையாகப் பெறுவர்களென்று பயனுரைத்துத் தலைக்கட்டுகிற பாசுரமிது. ஆழ்வார் மெலிவுமளவான வளவிலே எம்பெருமான் வந்து முகங்காட்டி ஆற்றாமையைப் போக்கி ஒருவாறு ஆச்வஸிப்பித்தமை முதலடியில் தொனிக்கும். திருக்குரவை கோத்தவன்று வெள்ளக்கேடாக வொண்ணாதென்று கண்ணன் ஆய்ச்சிகளைப் பிரிந்துமறைந்து நிற்க, அவர்களும் பிரிவாற்றமாட்டாதே கண்ணுஞ்சுழலிட்டுச் சாவவும் வருந்திக்கிடக்க, இனி உய்யவிரகில்லையென்னும்படி முடியுமளவானவாறே "**தாஸாமாவிரபூச் சௌரிஃ ஸ்மயமாநமுகாம்புஜஃ । பீதாம்பரதரஃ ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மந்மதமந்மதஃ**— தாஸாமாவிரபூத் சௌரிஃ ஸ்மயமாநமுகாம்புஜஃ, பீதாம்பரதரஃ ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மந்மதமந்மதஃ." என்கிறபடியே பீதகவாடைப்பிரான் சடக்கெனத்தோன்றி முகங்காட்டினமை ப்ரஸித்தமேயன்றோ. இங்ஙனே ஆபத்துக்களிலேவந்து உதவுமியல்வினனை கண்ணபிரான் ஆழ்வார்க்கும் சாட்சிதந்து தேற்றுவித்தானாயிற்று.

இப்படிப்பட்ட எம்பெருமானது திருவடி விஷயமாக ஆழ்வாரருளிச்செய்த ஆயிரத்துள் இப்பத்தும் ஓதவல்லவர்கள் வானவரோடு நல்ல சேர்த்தியாவர்கள். .... (கக).

நான்காம்பத்து இரண்டாந் திருவாய்மொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

ஶைத்யாத் ஸௌகந்த்யயோகாத் ருசிருசிரதயா போஷணாதாபிரூப்யாத்
ஸந்தர்ப்பாத் புஷ்பஸங்காந் மஹிததுளஸிகாமாலயா யோகதஶ்ச । [ஶங்கதஶ்
சக்ராதீஶஸ்ய யோகாத் வடதளஶயநாத்யர்ஹணீயாவதாநைஃ
ஸம்பந்நாநேகபோக்யம் நிரவிஶதஜிதம் க்ருஷ்ணமூர்த்திம் ஶடாரிஃ ॥

சைத்யாத் என்று தொடங்கி புஷ்பஸங்காத் என்றளவுமுள்ள பஞ்சமியந்த பதங்கள் "மஹிததுளஸிகாமாலயா" என்ற பதத்தின் ஏகதேசமான 'மஹித' என்பதிலே அந்வயிக்கும். "சைத்யாத் மஹிததுலஸிகாமாலயா" "ஸௌகந்த்யயோகாத் மஹிததுலஸிகாமாலயா" "ருசிருசிரதயா மஹிததுலஸிகாமாலயா" "போஷணாத் மஹிததுலஸிகாமாலயா" "ஆபிரூப்யாத் மஹிததுளஸிகாமாலயா" "ஸந்தர்ப்பாத் மஹிததுலஸிகாமாலயா" "புஷ்பஸங்காத் மஹிததுளஸிகாமாலயா" என்றிங்ஙனே யோஜித்தபடியாம் பாட்டுத்தோறும் ஆழ்வார் ஆசைப்பட்டதாகச் சொன்னது திருத்துழாயேயாதலால் அந்தத் திருத்துழாயின் ஒவ்வொரு குணம் ஒவ்வொரு பாசுரத்தில் விவக்ஷிதமாகக் காட்டியருளுகிறார்.

முதற்பாட்டில் * தண்ணந்துழாய் * என்றதில் குளிர்ச்சியில் நோக்காகக் கொண்டு சைத்யாத் என்றது.

இரண்டாம்பாட்டில் * நல்லடிமேலணிநாறுதுழாய் * என்கையாலே பரிமளத்தில் நோக்காகக் கொண்டு * ஸௌகந்த்யயோகாத் * என்றது.

மூன்றாம்பாட்டில் * சேவடிமேலணிசெம்பொன்துழாய் * என்கையாலே காந்தியினாலுண்டான ஸ்ப்ருஹணீயதை சொல்லுவதில் நோக்காகக் கொண்டு * ருசிருசிரதயா * என்றது. நாலாம்பாட்டுக்கும் இதுவே ப்ரமேயமாகும். ஐந்தாம்பாட்டின் ப்ரமேயம் முதல்பாட்டின் ப்ரமேயத்திலே சேரும். ஏழாம் பாட்டில் * வடங்கொள்பூந்தண்ணந்துழாய்மலர்க்கே * என்றதில் அடர்த்தியும் பார்வையழகும் தொடையழகும் புஷ்பச்சேர்த்தியும் விவக்ஷிதமாகக் கொண்டு "போஷணாத் ஆபிரூப்யாத் ஸந்தர்ப்பாத் புஷ்பஸங்காத்" என்றது. ஆக இப்படிப்பட்ட குணங்களினால், மஹித—சிறந்ததான, துலஸிகாமாலயா—திருத்துழாய் மாலையோடே, யோகாத்—சேர்க்கையினாலும், சங்கதஃ சக்ராதீசஸ்ய ச யோகாத்—சங்கு சக்கரங்களோடு சேர்க்கையினாலும், வடதள சயநாதி அர்ஹணீய அபதாநைஃ—ஆலிலையன்னவசஞ்செய்தல், குரவைகோத்தல், உலகளத்தல், எருதேழடர்த்தல், நிலமிடத்தல், கடல்கடைதல், இலங்கையழித்தல் முதலிய சரிதைகளோடும் கூடினவனை, அஜிதம் க்ருஷ்ணமூர்த்திம்—ஜயசீலனை கண்ணபிரானை, சடாரிஃ—ஆழ்வார், ஸம்பந்ந அநேகபோக்யம்—பஹுவித போக்யஜாத விசிஷ்டனை, நிரவிசத்—(பாலனையென்கிற திருவாய்மொழியிலே) அநுபவித்தாரென்றபடி.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

தம் ஸக்ருத்ஷாய்யதித்ராயஸ்யவெநிவ்ருத்தௌ
ஸாம்ஶ்ப்ரஹ்மஸ்பர்ஶஹாவஸ்யஶெஸவிஷ்ணுர்மஶ்ச ।
ஸம்வாஸஸ்வா தத் நவாவிஹஸ்வாஷிதீயெ
ஸ்ரீஹாவ நாம்ஸஶ்யிமஹ்ஷ்ஸநிஶஸ்ஸௌஹ ॥

(கருத்து.) கீழ்த்திருவாய்மொழியில் ஐச்வர்ய கைவல்யாதி புருஷார்த்தங்கள் த்யாஜ்யங்களாக நிச்சயிக்கப்பட்டு எம்பெருமானடியடைவதே பரமபுருஷார்த்தமென்று நிர்ணயிக்கப்பட்டபடியால், இதர புருஷார்த்தங்களில் ருசியொழிந்து அந்தப் பரமபுருஷார்த்தத்தைப் பெறவேணுமென்கிற விருப்பமுடையரான ஆழ்வார், காலத்தாலும் தேசத்தாலும் கைகழிந்ததான போகத்தில் ஆசை வைத்தபடியாலே அது கிடைக்கப்பெறாத வருத்தத்தினால் இவ்விரண்டாந் திருவாய்மொழியில் பெண்ணிலைமை யடைந்து மோஹித்தாரென்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையால்
காலத்தால் தேசத்தால் கைகழிந்து—சால
அரிதானபோகத்தில் ஆசையுற்றுநைந்தான்
குருகூரில் வந்துதித்தகோ.

பதவுரை.

குருகூரில்	திருநகரியில்	காலத்தால் தேசத்தால் கைகழிந்து	கால தேசங்களினால் கைகழிந்து போனதனால்
வந்து உதித்த கோ	வந்து அவதரித்த ஸ்வாமியான ஆழ்வார்	சால அரிது ஆன	மிகவும் துர்லபமான
பாலரை போல்	(விரும்பின பொருள் உடனே கைப்பட வேணுமென்று அழுகிற) சிறு பிள்ளைகளைப்போல	போகத்தில்	அநுபவத்தில்
சீழ்கி	சிணுங்கி	ஆசை உற்று	ஆசை அதிகரிக்கப்பெற்று
பரன் அளவில் வேட்கையால்	எம்பெருமான் பக்கலிலுள்ள ஆசையாலே,	நைந்தான்	வருந்தினார்.

ஆழ்வார் "பாலனாய்" என்கிற திருவாய்மொழியில், சிறுபிள்ளைகள் ஏதேனுமொரு வஸ்துவை ஆசைப்பட்டு அதுவே வேணுமென்று பிடிவாதம் பிடித்துக் கதறுமாபோலே, எம்பெருமானுடைய புராதனங்களான அபதானங்களில் ஆசைவைத்து, காலத்தாலும் தேசத்தாலும் அதீதங்களாயும் துர்லபங்களாயுமிருக்கிற போகங்களை விரும்பி அவற்றைப் பெறுவதற்காக ஆற்றாமைப் பட்டாரென்றதாயிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

159928 சென்னை-600 005

திருவாய்மொழி—நான்காம்பத்து
மூன்றாந் திருவாய்மொழி—கோவைவாயாள்.

உரையவதாரிகை:—கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார் ஆசைப்பட்டபடியே எல்லாம் பெறும்படி எம்பெருமான் இவரோடே கலந்து, தன்னுடைய பரமப்ரணயித்வத்தை வெளியிட்டுக்கொண்டான்; அதுகண்டு மிகவும் உவந்த ஆழ்வார் அந்த பிரணயித்வ குணத்தை இத்திருவாய்மொழியிலே பேசுகிறார்.

இத்திருவாய்மொழியை நம் பூருவாசாரியர்கள் மூன்றுபடியாக நிர்வஹிப்பர்கள். 1. சந்திரனைப் பிடித்துத் தரவேணுமென்று அழுகின்ற குழந்தைக்குத் தேங்காயைக் கொடுத்து அழுகையை மாற்றுவதுண்டே; அதுபோலே, கீழ்த் திருவாய்மொழியில் தேஶகால விப்ரக்ருஷ்டங்களைப் பெறவேணு மென்று ஆசைப்பட்ட ஆழ்வார்க்கு எம்பெருமான் ஒரு குணாநுபவத்தைப் பண்ணி வைக்க, அத்தாலே, கீழ்ப்பிறந்த இழவையெல்லாம் மறந்து அந்த குணத்தையே அநுபவிக்கிறார் என்று எம்பார் அருளிச் செய்யும்படி.

2. காலத்தால் தேசத்தால் கைகழிந்தவற்றை யநுபவிக்க ஆசைப்பட்ட ஆழ்வாருடைய திருமுகமண்டலத்தை நோக்கி எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் அபேக்ஷித்தபடியே செய்யக்கடவோம்' என்று ஒருவார்த்தை சொல்ல, அது கேட்டுக் களித்துக் கீழிழவை மறந்து க்ருதார்த்தராகிறார்—என்று திருமலை நம்பி அருளிச் செய்யும்படி.

3. எம்பெருமான், ஆழ்வார் அபேக்ஷித்தபடியே செய்து தலைக்கட்ட வல்லவனாகையாலே, (அதாவது) காலம் தானிட்ட வழக்காம்படி காலநிர்வாஹகனாகையாலே, காலோபாதியைக் கழித்து, அதீதகாலத்திற் போகங்களையும் நிகழ்காலத்திற்போலே ஒரு போகியாக்கிக் கொடுக்க, அவற்றை யநுபவித்து மகிழ்கிறார்—என்று பட்டர் அருளிச் செய்யும்படி.

அபேக்ஷித்த போகங்களைத்தாராமல் ஏதோவொரு குணத்தை யநுபவிப்பிக்க அதனாலே களித்துப் பேசுகிறாரென்பது, எம்பாருடைய நிர்வாஹம். அபேக்ஷித்த போகங்களைத் தாராவிட்டாலும் தருவதாக முகம் நோக்கி வாயினாற் சொல்லி மகிழ்வித்தானெம்பெருமான் என்பது, திருமலை நம்பியின் நிர்வாஹம். அபேக்ஷித்தபடியே அநுபவிப்பித்தருளினனென்பது, பட்டருடைய

நிர்வாஹம். இங்ஙனே மூன்றுபடியாகவும் நிர்வஹிக்க ஔசித்யமுண்டு என்று தெரிவித்தவாறு.

"இப்படி அவஸந்நரான தம்முடைய அவஸாதமெல்லாம் போம்படி தம்மோடே கலந்தருளின எம்பெருமானுடைய ப்ரணயித்வகுணாநுபவஜநித ப்ரீதியாலே அந்த ப்ரணயித்வத்தைப் பேசுகிறார்" என்ற ஆறாயிரப்படி யருளிச்செயலும் காண்க. .... (*)

கோவைவாயாள்பொருட்டு ஏற்றினெருத்தமிறுத்தாய் ! * மதிளிலங்கைக்
கோவைவீயச்சிலைகுனித்தாய் ! குலநல்யானைமருப்பொசித்தாய் ! *
பூவைவீயாநீர்தூவிப் போதால்வணங்கேனேலும் * நின்
பூவைவீயாம்மேனிக்குப் பூசும்சாந்தென்னெஞ்சமே. (க)

கோவை வாயாள் பொருட்டு	கோவைக்கனிபோற் சிவந்த அதரத்தையுடையளான நப்பின்னைப் பிராட்டி நிமித்தமாக	மருப்பு	கொம்பை
ஏற்றின்	எருதுகளினுடைய	ஒசித்தாய்	முறித்தொழித்தவனே !
எருத்தம்	பிடரியை	பூவை வீயா நீர்	புஷ்பத்தை விட்டு நீங்காத தீர்த்தத்தை [புஷ்பத்தையும் தீர்த்தத்தையும் என்றபடி]
இறுத்தாய்	முறித்தவனே !,	தூவி	பணிமாறி
மதிள்	மதிள் சூழ்ந்த	போதால்	உரிய காலங்களில்
இலங்கை	லங்காபுரிக்கு	வணங்கேன் எலும்	உன்னைப் பணிந்திலேனாகிலும்
கோவை	அரசனான ராவணன்		
வீய	முடியும்படியாக	நின்	உன்னுடைய
சிலை	சார்ங்க வில்லை	பூவை வீ ஆம் மேனிக்கு	காயாம் பூப்போன்ற திருமேனிக்கு
குனித்தாய்	வளைத்தவனே !		
குலம் நல் யானை	நல்ல ஜாதியிலே பிறந்து அழகியதான குவலயாபீடயானையினுடைய	பூசும் சாந்து	சாத்தத் தகுதியான சந்தனம்
		என் நெஞ்சமே	எனது நெஞ்சமேயாகும்.

* * * [கோவைவாயாள்.] நப்பின்னைப் பிராட்டி நிமித்தமாக எருதுகளை அடர்க்கும்போதும், ஸீதா பிராட்டி நிமித்தமாக இராவணனை யழிக்கும் போதும் அந்தந்த ஸமயங்களிலுண்டான சிரமம் தீரும்படி அடியேன் அவ்வப் போதுகளில் ஸந்நிஹிதனாயிருந்து உபசாரங்கள் செய்யப் பெற்றிலேன் ; அப்படியிருந்தும் என்னுடைய ஹ்ருதயத்தையே உனக்குப் பரம போக்யமாகக் கொண்ட விதம் என்னே ! என்று ஈடுபடுகிறார். அந்தந்த ஸமயங்களில் சிசிரோபசாரம் பண்ணப்பெறாத குறைதீர இப்போது என்னெஞ்சுதானே உனக்கு சிசிரோபசாரமாக நின்றது என்கை பரமதாத்பர்யம்.

கோவைவாயாள்பொருட்டு= 'பின்னைபொருட்டு' என்னாமல் இங்ஙனே சொன்னது, அவளுடைய வாயழகைக் கண்ட கண்ணபிரான், தன்னைப் பேணாமலும் எருதுகளின் செருக்கைக்கணிசியாமலும், 'அருந்தொழில் செய்தாகிலும் இவளை நாம் பெற்றே தீரவேணும்' என்று உறுதி கொண்டபடியைக் காட்டுதற்காம். இங்கே ஈட்டுஸ்ரீஸூக்தி காண்மின் ;—"ரிஷபங்களேழை முன்னிட்டு

'இவற்றை அடர்த்தார்க்கு இவளைக் கொடுக்கக் கடவோம்' என்று சொல்லி இவளை அலங்கரித்து முன்னே கொண்டுவந்து நிறுத்தினார்கள்; 'இவளை அணையலாமாகில் இவற்றை முறித்தாலாகாதோ' என்று தன்னைப்பேணாதே அவற்றின் மேலே விழுந்தான்."

மற்றொருவகையான ரஸப்பொருளும் அருளிச் செய்வதுண்டு ; அதாவது—எருதேழடர்த்தவர்க்கு நப்பின்னையை மணம்புரிவிப்பதென்று கந்யாசுல்கம் ஏற்படுத்தப்பட்டிருப்பதான செய்தியைச் செவியுற்ற கண்ணபிரான் பலராமனோடுகூட அவ்விடத்திற்கு எழுந்தருளினபோது, நப்பின்னையின் கண்ணெதிரே முந்துறமுன்னம் பலராமன் நிற்க, அவனைக்கண்ட அவள் 'ஒருகால் இவன் எருதேழடர்த்தானாகில் இவனை மணம்புரிந்து கொள்ளவேண்டி வருமே !' என்று இன்னாப்போடே கிடந்தாளாம் ; உடனே கண்ணபிரான் வந்து தோற்றினவாறே மிக மகிழ்ந்து புன்முறுவல் செய்தனளாக, அப்போது அதரத்திலுண்டான பழுப்பைக் கணிசித்துக் "கோவைவாயாள்" என்றதாக.

"ஏற்றினெருத்தமிறுத்தாய்" என்று இவ்வபதானத்தை இங்கு முறையிடுவதற்குக் கருத்து யாதெனில் ; மாயமானின் பின்னே பெருமாள் தொடருகிறபோது அருகேநின்ற இளையபெருமாள் தெளிந்துநின்று 'இது மாயாமிருகம் ; ராக்ஷஸமாயை' என்றாப்போலே நானும் அப்போது [ஏற்றினெருத்தமிறுத்தபோது] 'இவை அஸுராவேசம் பொருந்தியவை' என்று சொல்லியிருக்கலாமே ; அந்தோ ! அது செய்யப் பெற்றிலேனே ! என்னும் குறையைக் காட்டுதலாம்.

மதிளிலங்கைக்கோவைவீயச் சிலைகுனித்தாய் != நகரத்திற்கு மதிளுடைமை விசேஷித்துச் சொல்ல வேண்டியதன்றாயிருக்க, இங்குச் சொன்னதற்கு நம்பிள்ளை ஒரு கருத்தருளிச் செய்கிறார்—இராவணன், ஸர்வரக்ஷகரான ஸ்ரீசக்ரவர்த்தி திருமகனைத் தனக்கு ரக்ஷகராக மதிக்கவேண்டியிருக்க அது செய்யாதே இந்த மதிளை நமக்கு ரக்ஷகம் என்றிருந்தானும் ; 'இம்மதிளும் ஊரும் உண்டே நமக்கு' என்று இறுமாப்புக் கொண்டிருந்தானும் ; அது தோன்ற அருளிச் செய்தபடியென்று. இராவணன் வீயுமாறு தேவரீர் சிலை குனித்த காலத்திலே விபீஷணாழ்வான்போல்வார்போலே அருகே நின்று ஒன்றும் உதவப் பெற்றிலேனே ! என்னுங்குறையை இங்குக்காட்டிக் கொள்ளுகிறபடி. கோவை என்றவிடத்து இரண்டனுருபுக்கு விவக்ஷையில்லை.

குலநல்யானைமருப்பொசித்தாய் != குவலயாபீடமென்னும் மதயானையை மதமூட்டிக் கம்ஸன் தனது அரண்மனை வாசலிலே நிறுத்திவைக்க, அதன் கொம்பை முறித்து அத்தோடே போர் செய்கிறபோது "ஆவரிவை செய்தறிவார் அஞ்சனமாமலைபோலே, மேவுசினத்தடல் வேழம்வீழ முனிந்து" இத்யாதிப்படியே 'அந்தோ ! பரமஸுகுமாரமான இக்கண்ணபிரானுடைய வடிவெங்கே ! இந்த முரட்டு யானை எங்கே !' என்று வயிறெரிந்த மதுரையிற் பெண்களின் திரளிலேநின்று தாமும் உருகப்பெறாத குறையைக் காட்டிக் கொள்ளுகிறபடி.

பூவை வீயா= ‘வீயா’ என்பதை ‘செய்யா’ என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சமாகக் கொண்டு ‘புஷ்பங்களைப் பணிமாறி’ என்று பொருள் கொள்வதுமுண்டு; அன்றியே, ‘வீயா’ என்பதை எதிர்மறைப் பெயரெச்சமாகக் கொண்டு ‘புஷ்பங்களை விட்டு நீங்காத நீரைத்தூவி’ என்றுரைத்தலுமுண்டு; புஷ்பங்களோடு கூடின நீர் என்றபடி: புஷ்பங்களையும் நீரையும் பணிமாறி என்றதாயிற்று. போதால்வணங்கேனேலும்—நப்பின்னைப்பிராட்டிக்காக எருதேழடர்த்தபோதென்ன, ஸீதாபிராட்டிக்காக இராவணனோடு பொருதபோதென்ன, மதுரையில் கஞ்சனது மதயானையோடு பொருதபோதென்ன, ஆகிய இப்போதுகளிலே உடனிருந்து உபசாரங்கள் செய்யப்பெற்றிலேனாகிலும் என்றபடி.

நின்பூவைவீயாமேனிக்கு என்னெஞ்சமே பூசுஞ்சாந்து= உன்னுடைய திருமேனிக்கு எனது ஹ்ருதயமே உபசாரம்; அதாவது—அந்தந்த ஸமயங்களில் உடனிருந்து உபசாரங்கள் பண்ணப்பெற்றிலேனே! என்று இப்போது குறைப்படுகின்றதற்கு நெஞ்சே காரணமாதலால் இத்தகைய நெஞ்சு உண்டாயிருக்கப் பெற்றவிதுவே உபசாரப்ராயம் என்றபடி. அன்றியே, உனக்குப் பூசுஞ்சாந்து என்னெஞ்சமாய்விடுவதே! என்று ஈடுபடுகின்றாராகவுமாம். என்னெஞ்சிலே எம்பெருமான்! இத்தனை யுகப்புச் செய்வதே! என்றவாறு.

பூவைவீ— பூவைப்பூ; காயாம்பூ. வீ என்று பூவுக்குப் பெயர். “வீகமழ் நெடுஞ்சினை” (36) என்ற புறநானூறுங் காண்க. பூவைவீஆம்—பூவைப்பூப்போன்றதான என்றபடி. .... (க)

பூசும்சாந்தென்னெஞ்சமே புனையும்கண்ணியெனதுடைய *
வாசகம்செய்மாலையே வான்பட்டாடையுமஃதே *
தேசமானவணிகலனும் என்கைகூப்புச்செய்கையே *
ஈசன்ஞாலமுண்டுமிழ்ந்த எந்தையேகமூர்த்திக்கே. (உ)

ஈசன்	ஸர்வேச்வரனும்	எனதுடைய	என்னுடைய
ஞாலம் உண்டு உமிழ்ந்த எந்தை	(ஒரு காலத்திலே) உலகங்களையுண்டு (மற்றொரு காலத்திலே) வெளிப்படுத்தின ஸ்வாமியாயும்	வாசகம் செய் மாலை	வாக்கினுல் தொடுக்கப்படுகிற சொல்மாலையேயாம்;
		வான் பட்டு ஆடையும்	சிறந்த திருப்பரிவட்டமும்
ஏகமூர்த்திக்கு	ஒப்பற்ற திவ்யமங்கள விக்ரஹத்தையுடையனுயுமிருக்கிற பெருமானுக்கு	அஃதே	அந்தச் சொல்மாலையேயாம்;
		தேசம் ஆன	தேஜஸ்கரமான
பூசும் சாந்து	பூசுவதற்குரிய சந்தனம்	அணி கலனும்	அணியப்படும் ஆபரணமும்
என் நெஞ்சமே	என் மனமேயாகும்;		
புனையும் கண்ணி	அணிந்து கொள்ளுதற்குரிய மாலை	என் கை கூப்பு செய்கை ஏ	எனது அஞ்சலிபந்தமே யாம்.

* * * [பூசுஞ்சாந்து.] தமது மனமொழி மெய்களாகிற முக்கரணங்களும் எம்பெருமானுக்குப் பரம போக்யமாகின்றமையை வியந்து கூறுகின்றார். எம்

பெருமானது திருமேனியின் வைலக்ஷண்யத்தையும், அவன்றனக்குத் தம்மிடத்து உண்டான விருப்பத்தையும் சிந்தனை செய்து, முன் சொன்னதையே மீண்டும் வாய் வெருவுகிறபடி.

எனதுடையவாசகஞ்செய்மாலையே புனையுங்கண்ணி— எம்பெருமான் பூமாலைகள் அணிந்து கொண்டால் என்ன ஔஜ்ஜ்வல்யமிருக்குமோ அது தமது சொல்மாலைகளை ஏற்றுக்கொண்டதனால் இருக்கின்றதென்றபடி.

வான்பட்டாடையும்அஃதே= தமது அருளிச்செயலே எம்பெருமானுக்குப் பீதாம்பரமென்கிறார். அழகிய வஸ்த்ரமில்லாதவனுக்கு உலகில் மதிப்பு ஏற்படுவதில்லை; எம்பெருமானுக்கு ஆழ்வாரருளிச் செயல் இல்லையாமாகில் மதிப்பு ஏற்படாதென்பது உய்த்துணரத்தக்கது. இங்கே நம்பிள்ளையீடு காண்மின்;—“ஆழ்வாருடைய உக்திதானே அவனுக்கு வஂஸூவாஹமான பரிவட்டமும். இவருடைய பா நல்லநூலாகையாலே வான்பட்டாடையாயிற்றுக் காணும். ‘நல்லநூலாகவேணும்’ என்று அடியிலே நோற்று நூற்றவரிறே.”

என்கைகூப்புச்செய்கையே தேசமானவணிகலனும்= ஆழ்வார்தாம் ஓர் அஞ்ஜலி பண்ணினால் அதுதன்னால் எம்பெருமான் தன்னை ஸர்வாபரணபூஷிதனாகக் கருதுகின்றான்போலும். . அஞ்ஜலி என்பதற்கு “சும ஜறுயதி” என்று வ்யுத்பத்தி கூறுவர்; அகாரவாச்யனை எம்பெருமானை நீர்ப்பண்டமாக உருக்குவது என்றபடி. “நின்தலையைத் தாழ்த்து இருகை கூப்பென்றால் கூப்பாது பாழ்த்த விதி” என்கிறபடியே ஓர் அஞ்ஜலிமாத்திரமும் அரிதான இந்நிலத்தில் அது கிடைக்கப் பெற்றால் எம்பெருமான் மிக்க புகர்பெற்று விளங்குவனென்பதில் ஐயமில்லை.

ஸர்வேச்வரனும், ஜகத்துக்கு ஸர்வப்ரகார ரக்ஷகனும், அர்த்தத்தன்மையினால் என்னை யீடுபடுத்திக் கொண்டவனும் அத்விதீயமான திருமேனியையுடையவனுமிருக்கிற எம்பெருமான் இப்படியெல்லாம் திருவுள்ளம் பற்றுவதே! என்பது ஈற்றடியின் கருத்து. .... (உ)

ஏகமூர்த்தியிருமூர்த்தி மூன்றுமூர்த்திபலமூர்த்தி
யாகி * ஐந்துபூதமாய் இரண்டுசுடராயருவாகி *
நாகமேறிநடுக்கடலுள்துயின்ற நாராயணனே! * உன்
ஆகமுற்றுமகத்தடக்கி ஆவியல்லல்மாய்த்ததே. (ங)

ஏகம் மூர்த்தி	காரணபூதமான ஒரு மூர்த்தியாய்	மூன்று மூர்த்தி	ஸாத்விகமாயும் ராஜஸமாயும் தாமஸமாயும் மூன்றுவகைப்பட்ட அஹங்காரத்தை வடிவாகக்கொண்டமூர்த்தியாய்
இரு மூர்த்தி	(ஸ்ருஷ்டியின் தொடக்கத்திலே) ப்ரக்ருதி மஹான்களைச் சரீரமாகக்கொண்டு நிற்கும் மூர்த்தியாய்		

பல மூர்த்தி ஆகி	மநஸ் முதலிய கரணங்களை வடிவாகவுடையனாய்	துயின்ற	திருக்கண்வளர்ந்தருளின
ஐந்து பூதம் ஆய்	பஞ்ச பூதங்களை வடிவாகவுடையனாய்	நாராயணனே	நாராயணனே!
இரண்டு சுடர் ஆய்	ஸூர்ய சந்திரர்களிருவரையும் வடிவாகவுடையனாய்	உன்	உன்னுடைய
அரு ஆகி	ஸர்வாந்தர்யாமியாய்,	ஆகம்	திருமேனியையும்
நடு கடலுள்	திருப்பாற் கடல் நடுவே	முற்றும்	அதற்கு வேண்டிய மற்றெல்லாவற்றையும்
நாகம் ஏறி	திருவனந்தாழ்வான் மீது ஏறி	அகத்து	எனது நெஞ்சினுள்ளே
		அடக்கி	அடங்கவைத்து
		ஆவி	உன் திருவுள்ளம்
		அல்லல் மாய்த்ததே	இடர் நீங்கப்பெற்றதே!

* * * [ஏகமூர்த்தி.] கீழ்த்திருவாய்மொழியில் தமக்குண்டான ஆற்றாமை தீரப்பெற்றமையை அருளிச் செய்கிறார். **ஏகமூர்த்தி**—ஸ்ருஷ்டிக்கு முன்பு ஸூக்ஷ்ம சிதசித்விசிஷ்டனைக் கொண்டு ஒரே மூர்த்தியாக இருக்குமிருப்பை „ ஸதேவ ஸோம்ய! இதமக்ர ஆஸீத் ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம” என்று உபநிஷத்து ஓதிற்று, அதுதன்னை இதனால் அருளிச் செய்தபடி. **இருமூர்த்தி**= ஸ்ருஷ்டியிலே உந்முகனைப் ப்ரக்ருதி மஹாந் என்ற இரண்டு தத்துவங்களையும் சரீரமாகக் கொண்டு நிற்கிற நிலையைச் சொன்னபடி. **மூன்றுமூர்த்தி**=ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்று மூன்றுவகைப்பட்ட அஹங்காரமென்கிற தத்துவத்தைச் சரீரமாகக்கொண்டு நிற்கும் நிலையைச் சொல்லுகிறது.

பலமூர்த்தியாகி ஐந்துபூதமாய்= ஸாத்விகாஹங்காரத்தின் காரியமான பதினோரிந்திரியங்களையும் தாமஸாஹங்காரத்தின் காரியமான நிலம் நீர் தீ கால் விசும்பு என்கிற பஞ்ச பூதங்களையும் சரீரமாகக் கொண்டிருக்கும்படியைச் சொன்னபடி.

ஏகமூர்த்தி— பரவாஸுதேவமூர்த்தி;

இருமூர்த்தி— பரவாஸுதேவன் வ்யூஹவாஸுதேவன் ஆகிற இரண்டு மூர்த்தி.

மூன்றுமூர்த்தி— ஸங்கர்ஷண அநிருத்த ப்ரத்யும்ந மூர்த்திகள்.

பலமூர்த்தி— “எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்” என்கிற அநேக விபவாவதார மூர்த்திகள் என்றுரைப்பாருமுண்டு.

இரண்டுசுடராய்= ஸூர்ய சந்திரர்களைச் சொல்லுகிறது; இவ்விருவரைச் சொன்னது கார்யவர்க்கங்களெல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். „ ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்” என்று உபநிஷத்து ஓதினவடைவு.

அரு ஆகி= ஒவ்வொரு பொருளிலும் அநுப்ரவேசித்திருக்கும்படியைச் சொல்லுகிறது. அரு— அரூபி.

[நாகமேறி யித்யாதி.] ஸ்ருஷ்டிக்கப்பட்ட பிரமன் முதலியோர் வந்து அடிபணிதற்குப் பாங்காகத் திருப்பாற்கடலினிடையே திருவனந்தாழ்வான்மீது சாய்ந்தருளினவனே!.

[உன்ஆகமுற்றும் இத்யாதி.] ஆகம்—உடம்பு; உடம்புக்கு வேண்டியவைகளான சாந்து, பூமாலை, திருப்பரிவட்டம், ஆபரணம் ஆகிய இவற்றை (இலக்கணையால்) சொல்லுகிறது. **உன்ஆகம்முற்றும்**—உன் திருமேனிக்கு வேண்டியவற்றை யெல்லாம்; **அகத்துஅடக்கி**—என்னுள்ளே உண்டாம்படி பண்ணி; (அதாவது, கீழிரண்டு பாட்டுக்களிற் கூறியபடியே அமைத்துக் கொண்டு.) **ஆவி**—உன் ஹ்ருதயத்திலிருந்த, **அல்லல்**—துயரம், **மாய்த்தது**—போக்கிக்கொள்ளப் பெற்றது.

‘என் ஆவி’ என்றாவது ‘உன்ஆவி’ என்றாவது சொல்லாமையாலே இரண்டு வகையாகவுங் கொள்ளப் பொருந்தும். இங்கே நம்பிள்ளையீடு;— “ உன் திருவுள்ளத்திலுண்டான அல்லல் ஒருபடி நசிக்கப் பெற்றதே!. இத்தலையை ஒருபடி கரைமரஞ்சேர்த்து நீ க்ருதக்ருத்யனானையே. அன்றிக்கே, என்னுவியானது நிர்த்துஃக்கமாயிற்று என்றுமாம்.” .... (ரு)

மாய்த்தலெண்ணிவாய்முலைதந்த மாயப்பேயுயிர்
மாய்த்த * ஆயமாயனே! வாமனனே! மாதவா! *
பூத்தண்மாலைகொண்டு உன்னைப்போதால்வணங்கேனேலும் * நின்
பூத்தண்மாலைநெடுமுடிக்குப் புனையும்கண்ணியெனதுயிரே. (சு)

மாய்த்தல் எண்ணி	முடிப்பதாக நினைத்து	பூ தண் மாலை கொண்டு	பூக்கள் தொடுத்துக் குளிர்ந்த மாலைகளைக் கொண்டு
வாய்	வாயிலே	போது	அவ்வப்போதுகளில்
முலை தந்த	நஞ்சு தீற்றிய முலையை வைத்த	வணங்கேன் ஏலும்	வழிபாடு செய்யப்பெற்றிலேனாகிலும்
மாயம் பேய்	பூதனையினுடைய	நின்	உன்னுடைய
உயிர்	பிராணனை	பூ தண் மாலை நெடு முடிக்கு	புஷ்பமயமாய்ச் செவ்விய மாலையாலே அலங்கரிக்கப்பட்ட நீண்ட திருமுடிக்கு
மாய்த்த	முடித்துவிட்ட	புனையும் கண்ணி	அலங்காரமாய்ச் சாத்துகின்ற மாலை
ஆய! மாயனே! வாமனனே! மாதவா!—		எனது உயிரே	என் பிராணனாவதே!
உன்னை	உன்னை		

* * * [மாய்த்தலெண்ணி.] பூதனையை முடித்தல் முதலான ஸமயங்களில் விடாய்தீர வந்துநின்று சிசிரோபசாரம் பண்ணப்பெற்றிலேனே யாகிலும் உன் திருமேனிக்கு என்னுயிரே உபசாரமாய்விட்டதே யென்கிறார். கம்ஸன், தன்னைக் கொல்லப்பிறந்த தேவகீபுத்திரன் ஒளித்து வளர்தலையறிந்து, அக்குழந்தையை நாடியுணர்ந்து கொல்லும்பொருட்டுப் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்கு வந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த ஸ்ரீக்ருஷ்ண சிசுவை

யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலேடைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானுன குழந்தை அவ்வரக்கியின் தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்ணுகிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி, அவள் பேரிரைச்ச லிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கிவிழுந்து இறக்கும்படி செய்தனன் என்ற வரலாறு இங்கு அறியத்தக்கது.

"மாய்த்தலெண்ணி" என்றவிடத்து 'இன்னாரை மாய்த்தல்' என்று விரியச் சொல்லாமையாலே 'உலகத்தையே மாய்க்கவெண்ணி' என்றும் பொருள் கொள்ளலாம். ஸகல ஜகச்சரீரியான கண்ணனை நலிய நினைத்தது உலகத்தையே உபஸம்ஹாரம் பண்ண நினைத்தபடி யாகுமன்றே. அவள் பேயாய் வருகையன்றியே தாயாய் வந்ததனால் 'மாயப்பேய்' எனப்பட்டது.

வாமனனே !=க்ருஷ்ணாவதாரத்தில் பூதனை முலைகொடுத்தபோது அதற்கு மாற்று மருந்தாக முலை கொடுக்கைக்கு ஒரு தாயாகிலுமிருந்தாள்; "வெங்கொங்கையுண்டானை மீட்டாய்ச்சி யூட்டுவான் தன் கொங்கை வாய்வைத்தாள் சார்ந்து" என்றும் "பேய்ச்சிபாலுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து ஆய்ச்சி முலைகொடுத்தாளஞ்சாதே" என்றும் பேயாழ்வார் அருளிச்செய்துவைத்தாரே. அதுவுமில்லாதபடி, வாமனனைப் பெற்றிட்டு வைத்துத் தாயும் தமப்பனும் தபஸ்ஸிலே அந்யபரராயிருக்க, ஆஸுரப்ரக்ருதி [மஹாபலி] யிருந்தவிடத்தே தானே சென்று கிட்டும்படியாயிற்றே; அக்காலத்திலே தாம் உடனிருந்து உபசாரம் செய்யப் பெறாமைக்கு உருகுகிறபடி.

மாதவா != லக்ஷ்மீ வல்லபனே! என்றபடி. "தீநாள் திருவுடையார்க்கில்லை" என்று ஒரு பழமொழியுண்டு; செல்வமுடையார்க்கு ஆபத்து ஒன்றும் வாராது என்றவாறு. கீழ்ச்சொன்ன அபாயங்களில் எம்பெருமான் தப்பிப் பிழைத்தது பிராட்டியின் கடாக்ஷத்தினாலென்கிறார் போலும்;

"𑌆𑌰𑌭𑍍𑌯 𑌶𑍈𑌶𑌵𑌮𑌨𑌾𑌰𑌤𑌮𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌾𑌤𑍍
𑌯𑌤𑍍𑌪𑍂𑌤𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌪𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌣𑌂 𑌮𑍁𑌰𑌾𑌰𑍇𑌃 ।
𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌿 𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌣𑌿! 𑌜𑌗𑌜𑍍𑌜𑌨𑌨𑌿! 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯
𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑌹𑌿𑌮𑌾 𑌖𑌲𑍁 𑌤𑌤𑍍𑌰 𑌹𑍇𑌤𑍁𑌃" ॥

ஆரப்ய சைசவமநாரதமப்ரயத்நாத்
யத்பூதநாதிவிபதுத்தரணம் முராரே:
கல்யாணி ருக்மிணி ஜகஜ்ஜநநி த்வதீய
மாங்கல்யஸூத்ரமஹிமா கலு தத்ர ஹேது:

என்ற ச்லோகம் இங்கு அநுஸந்திக்க வுரியது. லக்ஷ்மீகடாக்ஷமிருக்கும்போது அபாயம் புகுர ப்ரஸக்தியில்லையாகிலும் இருவருமான சேர்த்திக்கு மங்களாசாஸனம் பண்ண ப்ராப்தியுண்டே; "வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்ன வேண்டுமே; அது தவறின குறையை நினைக்கிறாரென்னலாம். பாற்கடல் கடைந்தகாலத்தில் பிராட்டி திருமார்பிலே வந்து

195. வேதவேத்ய வைதிகோபதேசம் ஆவித்யரளவிலே; அஜ்ஞர் ஜ்ஞாநிகள் ஜ்ஞாநவிசேஷயுக்தர் ஸர்வஜ்ஞ னென்றுமல் இவர் திருத்துவர்.

196. அறியாதார்க்கு உய்யப்புகுமாறும் இக்கரையேறினார்க்கு இன்பவெள்ள

வஷிணா ததயாவி க்ருயிதம் பாஹ்யமதம் த்ருணாயமந்யே— இதி மோஹநவர்ஷ்மணா த்வயாபி க்ரதிதம் பாஹ்யமதம் த்ருணாய மந்யே.'' என்று பட்டரருளிச் செய்தபடியே பகவதுக்தமாயிருந்தாலும் வேதவிருத்தமானதை வைதிகர் அங்கீகரியார்களன்றே; வேதவிருத்தமன்று என்னுமிடம் ப்ரகாசிப்பது வைதிக பரிக்ரஹத்தாலேயாகும் ஆகையால் கீதைக்கு உத்கர்ஷமும் ஆழ்வாரங்கீகாரத்தாலே யென்னத் தட்டில்லை இத்தால், கீதைக்கு உத்கர்ஷம் இவர் பரிக்ரஹங்கொண்டு சொல்லவேணும்; இவரருளிச் செயலுக்கு அதுவும் வேண்டாவென்று இவ்வழியாலும் ஏற்றஞ் சொல்லிற்றாயிற்று.

[உபதேச வைசால்யத்தாலும் திருவாய்மொழி யாசிரியரான ஆழ்வார்க்கு ஏற்றமுண்டென்றல்.]

195. ஹிதாநுசாஸநபரமான வேதம் உபதேசிப்பதும், வேதவேத்யனான எம்பெருமான் உபதேசிப்பதும், வைதிகர்களான மஹர்ஷிகளின் உபதேசமும் தத்வ ஹித புருஷார்த்தங்களில் அறிவில்லாதவர்களான ஸம்ஸாரிகள் மாத்திரத்திலேயாம்; அறிவிலிகளான ஸம்ஸாரிகளும், எம்பெருமானே உபாயமென்று கடைப்பிடித்திருக்கும் ஞானிகளும், எம்பெருமானுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளை ஸாக்ஷாத்கரித்து பகவதநுபவமே போது போக்காயிருக்கும் ஜ்ஞாந விசேஷ யுக்தர்களும், ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரனும் ஆக எல்லார்க்கும் வேண்டும் அம்சங்களை யுபதேசித்து ஆழ்வார் திருத்துவர்.

[ஆழ்வாருடைய உபதேச விஷயங்களின் விவரணம்.]

196. கீழ்ச் சொன்ன நான்கு வகைப்பட்ட அதிகாரிகளுக்கும் ஆழ்வார் அறிவிக்க வேண்டும் அர்த்த விசேஷங்கள் கூறப்படுகின்றன;—1. எம்பெருமானைப்பற்றின ஞானம் அடியோடு இல்லாத ஸம்ஸாரிகளுக்கு "அஃதே உய்யப் புகுமாறு" என்று திருநாரணன்தாளாகிறவதுவே உஜ்ஜீவிப்பதற்கு உபாயமென்று ஸம்ஸார நிஸ்தரணோபாயம் உபதேசிக்கலாகிறது; 2. "அக்கரையென்னு மனத் தக்கடலுளழுந்தியுன் பேரருளால் இக்கரையேறி யிளைத்திருந்தேனை" என்று ஸம்ஸாரக்கடலில் அழுந்துகிறவர்களுக்கு 'எம்பெருமானொருவனே உபாயம்' என்கிற ஞானம் பிறந்தால் இங்கேயிருக்கச் செய்தே அக்கரை இக்கரை யென்னும்படி ஸம்ஸாரம் தூரத்திலுள்ளதாய் பரமபதம் ஸந்நிஹிதமாம்படி [illegible] யாலே ஹ்ருதயகுஹாவாஸத்திலே வ்யவஸிதராய் [illegible] நிவ்ருத்தராயிருக்கிறவர்களுக்கு அந்த வ்யவஸாயம் குலைந்து பத[illegible]ண்டாம்படி

154928 சென்னை 600 008

மும் நிலையழியாதார்க்கு ஆழங்காலும் கரையேற்றுமவனுக்கு நாலாறு மறிவிக்கவேணும்.

197. அவன் முனிந்தார்க்குத் தாம்கண்டது, தம்மை முனிவார்க்குத் தம்கண், காணாதது காண்பார்க்குக் கண்மாறுமிடம் ராகாந்தனுக்கு மாயா

"முகில்வண்ணவானத்து இமையவர் சூழவிருப்பர் பேரின்ப வெள்ளத்தே" என்னும்படியான ப்ராப்ய வைலக்ஷண்யம் உபதேசிக்கலாகிறது;

3. ஆற்றிலேயிழிந்து போகாநிற்கச் செய்தே நிலைக்குமிடமும் நிலையாத விடமும் அறியாதாரைப்போலே, ஹராவஹாவராய் அநுபவியாநிற்கச் செய்தே அதில் நிலை கொள்ளலாமிடமும் ஆழங்கால் படுத்துமிடமும் அறியாதவர்களுக்கு "செஞ்சொற்கவிகாளுயிர்காத்து ஆட்செய்மின்" என்று சீலகுணமாகிற ஆழங்கால் உபதேசிக்கலாகிறது;

4. ஸம்ஸாரஸாகரத்தைக் கடத்தி அக்கரைப்படுத்துமவனை எம்பெருமானுக்கு "மங்கவொட்டு உன்மாமாயை" என்கிற பாட்டிற்படியே இருபத்திநான்கு தத்துவமும் உபதேசிக்கலாகிறது. [ஆக, அறிவு கேடரை உபாயத்திலே மூட்டுவர்; உபாயத்திலே ஊன்றுவாரை உபேயபரராக்குவர்; உபேயத்திலே அவகாஹிக்குமவர்களுக்கு ஆழங்கால் அறிவிப்பர்; ப்ராப்தியை உண்டாக்குமவனுக்கு த்யாஜ்யத்தை யறிவிப்பர் என்றதாயிற்று.]

[இதுவுமது.]

197. கீழ்ச் சொன்ன நால்வர்க்கும் அந்த நான்கு அர்த்தங்களையு முபதேசிப்பதற்கான ஹேதுக்களோடே அதுதானே மற்றொருபடியாக அருளிச் செய்யப்படுகிறது. 1. எம்பெருமானுடைய முனிவுக்கு [நிக்ரஹத்திற்கு] இலக்கான ஸம்ஸாரிகளுக்கு "ஞானப்பிரானை யல்லாலில்லை நான்கண்ட நல்லதுவே" என்று தாம்கண்டதை இவர்காட்டுவர்.

2. "எங்ஙனேயோ வன்னைமீர்காள்! என்னை முனிவதுநீர்" என்கிறபடியே தம்மை முனிகின்ற [கோபிக்கின்ற] தாய்மார்க்கு "என்னெஞ்சினால் நோக்கிக்காணீர்" என்று தம்முடைய உட்கண்ணைக் காட்டுவர். (அதாவது—ப்ராப்ய வைலக்ஷண்யாவகாஹியான என்னெஞ்சாலே பார்க்கமாட்டீர்களோ வென்று தம்முடைய உட்கண்ணை ப்ராப்ய வைலக்ஷண்ய ஜ்ஞானத்தை யுண்டு பண்ணுவர் என்றபடி.)

3. "செஞ்சொற் கவிகாள் உயிர்காத்து ஆட்செய்மின்" என்று—புறம்பு ஒருவர் காணாததும் காண வல்லவர்களான கவிகளுக்கு, 'அவனுடைய சீல குணத்திலே கண்வையாதே கொள்ளுங்கோள்' என்று கண்மாறுமிடம் காட்டுவர்.

தோஷம் இவர் காட்டுமவை.

198. ஸாதந ஸாத்யஸ்த மத்யஸ்தரைவிட்டு அவற்றிற்கலங்கும் ஜீவேச்வரர்க்கு

---

4. தம்மிடத்தில் அநுராகத்தாலே தேஹ தோஷம் காணமாட்டாத எம்பெருமானுக்கு "மங்கவொட்டு உன் மாமாயை" என்று ப்ரக்ருதி தோஷம் காட்டுவர். [ஸம்ஸாரிகள் எம்பெருமானுடைய நிக்ரஹத்திற்கு இலக்காயிருந்தபடியாலே அவர்களுக்கு அந்த நிக்ரஹத்தை மாற்றுவதற்காக உபதேசிக்கவேண்டியதாயிற்று; தாய்மார்கள் பகவத்விஷய வைலக்ஷண்யம் அறியமாட்டாமல் தம்மை முனிந்தபடியாலே அவர்களுக்கு உபதேசிக்கவேண்டியதாயிற்று; செஞ்சொற்கவிகள் எம்பெருமானுடைய சீலகுணமறியாமல் பகவத்விஷயத்தில் இழியப்புகுந்தபடியாலே அவர்களுக்கு உபதேசிக்கவேண்டியதாயிற்று; எம்பெருமான் ஸர்வஜ்ஞனாயிருந்தும் தம்முடைய தேஹதோஷம் காணாமையினாலே அவனுக்கு உபதேசிக்கவேண்டியதாயிற்று என்றவாறு.]

[ஆழ்வார் அதிகமாக உபதேசிப்பது ஸம்ஸாரிகளுக்கும் எம்பெருமானுக்குமே யென்பது.]

198. (அறிவிலிகளான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்குமாபோலே கீழ்ச்சொன்ன எல்லார்க்கும் பலகாலும் உபதேசிப்பரோ வென்ன; அதற்கு விடை கூறப்படுகிறது.) உபாயமும் உபேயமும் கைபுகுந்திருக்கப் பெற்றவர்களுக்கு அறிவிக்கவேண்டுவது மிகவும் சிறிதேயாதலால் அவர்களிருவரையும் விட்டு, கர்ம பரவசர்களாய் உபாயோபேயங்கள் இன்னதென்றறியாதே கலங்கிநிற்கிற ஸம்ஸாரி சேதநர்களுக்கும், ப்ரேமபரவசனாய் அவற்றில் கலங்கிநிற்கிற ஈச்வரனுக்கும் பலகாலும் உபதேசம் செய்வதுண்டு. ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிற இடங்கள் திருவாய்மொழியில் ப்ரஸித்தமானவையே. ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு திருவாய்மொழியுண்டு; முதலும் முடிவும் மாத்திரமே இங்குக் காட்டப்படுகிறது அதாவது "வீடுமின் நினைமின்" என்பதாக. முதற்பத்தில் "வீடுமின் முற்றவும்" என்று தொடங்கப்பட்டது. பத்தாம்பத்தில் "கண்ணன் கழலிணை" என்னும் திருவாய்மொழியில் "சுனைநன்மலரிட்டு நினைமின்" என்று தலைக்கட்டப்பட்டது. இங்ஙனே ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கப்புகுந்த பாசுரங்களில், உபாயம் இன்னது உபேயம் இன்னது என்கிற தெளிவு காட்டப்பட்டுள்ளது.

இனி, எம்பெருமானுக்கு உபதேசிப்பனவான பாசுரங்கள் காட்டப்படுகின்றன; "பிடித்தேன்" என்று தொடங்கி-(அதாவது) "உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கனவே" என்றும் "உன்னை நானடைந்தேன் விடுவேனோ" என்றும் இப்புடைகளிலே எம்பெருமானை நோக்கிக்கூறும் பாசுரங்கள் எதற்காக அவதரித்தவை யென்னில்; 'ஆழ்வார் அயோக்யதாநுஸந்தானம் பண்ணி நம்மை விட்டு நீங்கிவிடுவரோ' என்று எம்பெருமான் கலங்கிநிற்க, அந்தக் கலக்கம் தீர்க்க வந்தவை. "தோகைமாமயிலார்கள் நின்னருள் சூடுவார் செவியோசை வைத்

வீடுமின் நினைமின் பிடித்தேன் விடுவேனோ வைத்தெழ ஊது வாடி நிற்கக் கன்மமன்று ஆன்பின் கைகழியேல் உழிதராய் என் சொற்கொளென்று இவர் பலகாலும் ஹிதாஹிதங்கள் சொல்லுவர்.

தெழ ஊதுகள் போகவிட்டுக் குழலூது" "மழறுதேன் மொழியார்கள் நின்னருள் சூடுவார் மனம் வாடிநிற்க, எம்குழறுபூவையொடும் கிளியோடுங்குழகேலே" "கன்மமன்று எங்கள் கையில் பாவை பறிப்பது" "ஆன் பின் போகேல்" "என் கைகழியேல்" "நீயுகக்கு நல்லவரொடு முழிதராயே" "அவத்தங்கள் விளையுமென் சொற்கொள்" என்றிப்புடைகளிலே யுள்ள பாசுரங்களில் எம்பெருமானை நோக்கி 'இன்ன க்ருத்யங்களைச் செய், இன்ன அக்ருத்யங்களைச் செய்யாதேகொள்' என்று ஹிதாஹிதங்கள் உபதேசிக்கப்படுகின்றன. எனவே, தாய்மார்க்கும் செஞ்சொற் கவிகளுக்கும் உபதேசிக்குமிடம் சிறிதே யென்றும், ஸம்ஸாரிகளுக்கும் ஸர்வேச்வரனுக்கும் உபதேசிக்குமிடங்கள் அதிக மென்றும் காட்டப்பட்டதாயிற்று

மூலத்தில், "ஸாதநஸாத்யஸ்தமத்யஸ்தரை" என்பதற்கு, "ஸாதநஸ்தரென்ன, ஸாத்யஸ்தரென்ன, மத்யஸ்தரென்ன ஆகிய இவர்களை" என்று சிலர் பொருள் கொள்வது மிக்வும் பிசகு; "ஸாதநஸ்தரும் ஸாத்யஸ்தருமாகிற மத்யஸ்தர்களை" என்பதே பொருள். "அஜ்ஞர், ஜ்ஞாநிகள், ஜ்ஞாநவிசேஷயுக்தர், ஸர்வஜ்ஞன்" என்று உபதேசவிஷயபூதர்களாகச் சொல்லப்பட்ட நால்வருள் இரண்டாமவரும் மூன்றாமவரும் இடையிலே யுள்ளவர்களாதலால் அவர்களே இங்கு மத்யஸ்தர்களென்னப்படுகின்றனர்; அவர்களுள் ஒருவர் ஸாதநஸ்தர்; மற்றொருவர் ஸாத்யஸ்தர்; தாய்மார் உபாயாத்யவஸாய தசையிலே நின்று ஸ்வயத்ந ஹீநர்களாய் ப்ராப்ய வைலக்ஷண்ய மறியாதே இத்தனை அதிப்ராவண்யம் தகாதென்று ஹிதஞ் சொல்லுகிறவர்களாகையாலே அவர்கள் ஸாதநஸ்தர் என்னத் தகுதியுடையார்; "உயிர்காத்து ஆட்செய்மின்" என்று உபதேசிக்கப்படுகிற செஞ்சொற் கவிகள் ப்ராப்ய வைலக்ஷண்யத்தை நன்கறிந்து அதன் அநுபவத்தில் இழிந்தவர்களாகையாலே அவர்கள் ஸாத்யஸ்தர் என்னத் தகுதியுடையார். ஆகவே, ஸாதநஸ்தரும் ஸாத்யஸ்தருமாகிற மத்யஸ்தர்களை— என்றே பொருள் கொள்ளப் பொருந்தும்.

இனி, "அவற்றில் கலங்கும் ஜீவேச்வரர்களுக்கு" என்கிற வாக்யத்திலும் ஒரு சங்கை தோன்றும்; உபாயோபேயங்களில் கலக்கம் ஸம்ஸாரிகளுக்கு இருக்குமானாலும், ஸர்வஜ்ஞனை ஸர்வேச்வரனுக்கு அது இருக்க ப்ரஸக்தியில்லையே; அவனுக்கும் கலக்கமிருப்பதாக இங்குச் சொல்லுகிறவிது என்னேவென்று.—(இதற்கு உத்தரம்.) மயர்வறமதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுக்கு ஜ்ஞாநவிபாக கார்யமாக அஜ்ஞானமுண்டாவதுபோல, தெளிந்த சிந்தையனான எம்பெருமானுக்கும் ப்ரேம பாரவச்யத்தாலே கலக்கமுண்டாகக் குறையில்லை.

199. கதிர்ஞான மூர்த்திக்கு உணர்த்துவது ப்ரேமத்தாலே; தமமூடுவோர்க்கு வேட்கையெழுவிப்பது ஞானத்தாலே.

200. உயிர்மாய்தல் ஆழு மென்னுருயிரென்னும் பரதுःக்கம் ஸஹியாமையிரண்டிலுமுண்டு.

ஸர்வேச்வரனுக்கு ஸாதநவிஷயமான கலக்கம் எப்படிப்பட்டது? ஸாத்யவிஷயமான கலக்கம் எப்படிப்பட்டது? என்கிற ஆராய்ச்சி மணவாளமாமுனிகளின் வியாக்கியானத்தில் விரியக் காணத்தக்கது.]

[ஸம்ஸாரிகளுக்கும் ஸர்வேச்வரனுக்கும் பலகாலுமுபதேசிக்கைக்கு ஹேது இன்னதென்பது.]

199. "கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்!" என்கிறபடியே ஸர்வஜ்ஞனாயிருக்கிறவனுக்கு "திண்சக்கரநிழறு தொல்படையாய் உனக்கொன்றுணர்த்துவன் நான்" என்று உபதேசிக்கிறது அவன் விஷயத்திலுள்ள ப்ரேமத்தினாலாகும். "கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாகக் கொள்ளென்று தமமூடும்" என்று—ஐச்வர்யம் விநாச ஹேதுவாகக் காணநிற்கச் செய்தே பின்னையும் அத்தை ஸ்வீகரிக்கும்படி தமோகுணம் மேலிட்டுப் பெற்றிருக்கும் ஸம்ஸாரிகளுக்கு "நின்கண்வேட்கை யெழுவிப்பன்" என்று தம் உபதேசத்தாலே பகவத்பக்தியை விளைவிப்பது—அவர்களை விடமாட்டாதே திருத்தித் தம்மோடொக்க அவர்களையும் பகவதநுபவபரராக்கவேணுமென்கிற ஜ்ஞானத்தாலே.

[எந்த வுபதேசத்திற்கும் பரதுःக்காஸஹிஷ்ணுத்வமே ஹேதுவென்பது.]

200. ஆழ்வார் ஸர்வேசவரனைக் குறித்து உபதேசிப்பது ப்ரேமத்தாலே யென்றும், ஸம்ஸாரிகளைக் குறித்து உபதேசிப்பது ஞானத்தாலே யென்றும் என் சொல்லவேணும்? பரதுःக்கம் ஸஹியாமையன்றோ பரோபதேசத்திற்கு முக்கிய காரணம், என்ன; அதுவும் உண்டு எனப்படுகிறது. அதாவது—கீழே ஹேதுவாகச்சொல்லப்பட்ட ஜ்ஞானப்ரேமங்களிரண்டும் பரதுःக்காஸஹிஷ்ணுத்வத்தை யொழிந்திராது என்று மூதலிக்கப்படுகிறது. எங்ஙனேயென்னில்; "கொண்டாட்டும் குலம்புனைவும் தமருற்றார் விழுநிதியும் வண்டார் பூங்குழலாளும் மனையொழிய வுயிர்மாய்தல்கண்டு ஆற்றேன்" என்கிற பாசுரத்தில் 'ஸம்ஸாரிகள் பாரிக்கிற பாரிப்பும் முடிந்துபோகிறபடியும் கண்டு ஸஹிக்கமாட்டுகின்றிலேன்' என்கையாலே பருடைய துःக்கம் ஸஹியாமை ஸம்ஸாரிகளைக் குறித்து உபதேசிக்கைக்கு ஹேதுவாகச் சொன்ன ஜ்ஞானத்திலுமுண்டு: "அசுரர்கள் தலைப்பெய்யில் யவங்கொலாங்கென்று ஆழுமென்னாருயிர்" என்கிற பாசுரத்தில் 'அசுரர்கள் உன்னைவந்து கிட்டினால் அங்கு என்னாகுமோவென்று என் ஆத்மாவானது வருந்துகின்றது' என்கையாலே பரனான ஈச்வரனுடைய துःக்கம் ஸஹியாமை அவனைக்குறித்து உபதேசிக்கைக்கு ஹேதுவாகச் சொன்ன ப்ரேமத்திலுமுண்டு.

201. என்னதுன்னதாவியிலே அறிவாராத்மாவென்று அவன் மதந்தோன்றும்.

202. இருத்து மெண்டானாய்ப் பொய்கலவாது அன்பு செய்து பற்றிலனாய் க்ஷ[illegible]த்த்ருட்பீடித நிர்த்தநரைப்போலே கண்டுகொண்டுண்டு பருகிப்

[ஆழ்வார் எம்பெருமான் நினைவாலே அவனுக்கு உயிராகையாலும் அவனுக்கு ஒரு தீங்குவரப் பொறுக்கமாட்டாரென்கிறது.]

201. திருவாய்மொழியில் "உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்" என்ற பாசுரத்தில் 'என்னுடைய ஆவி உன்னது; உன்னுடைய ஆவி என்னது' என்கிறார். (அதாவது) என் ஸ்வரூபம் நீ இட்ட வழக்கு, உன் ஸ்வரூபம் நானிட்ட வழக்கு என்றவாறு. இவ்விடத்தை ஆளவந்தார் அருளிச் செய்யும் போது கேட்டிருந்த முதலிகளிலே சிலர் 'ஜீவாத்மாவின் ஸ்வரூபம் பரமாத்மா இட்ட வழக்கு என்றால் இதில் பொருந்தாமை யொன்றுமில்லை; பரமாத்மாவின் ஸ்வரூபம் ஜீவாத்மா இட்டவழக்கு என்கிறதே, இதுவென்? இது பொருந்துமோ!' என்றார்களாம்: அப்போது ஆளவந்தார் அருளிச் செய்தபடி :—'இவன் அவனிட்ட வழக்கு என்கிற விஷயத்தில் கர்மம் தடையாக நிற்கவுங்கூடும்; ஸர்வேச்வரன் தன்னை இவனிட்ட வழக்காக்குமிடத்தில் தடை செய்வாரில்லை; ஆனபின்பு 'உன்னதாவி என்னது' என்பதுதான் நிர்விவாதம். 'என்னதாவி உன்னது' என்றதில் நீங்கள் விவாதப்பட்டால் படலாமேயல்லது 'உன்னதாவி என்னது' என்றதில் விவாதப்பட நியாயமில்லை' என்றும். ஆகவே "என்னதுன்னதாவியும்" என்று 'உன்னுடைய திவ்யாத்மஸ்வரூபம் நானிட்ட வழக்கு' என்றதைக் குறிக்கொள்வது. "அறிவிலேனுக்கருளாய் அறிவாருயிரானாய்" என்றும் ஆழ்வார் அருளிச் செய்கிறார். 'அறிவாருயிரானாய்' என்பதற்கு 'அறிவாரையுயிராக வுடையவன்' என்கிற பொருளே பொருந்தும்; ஏனென்னில் "ஜ்ஞாநீ து ஆத்மைவ மே மதம்" என்ற கீதாஸூக்தியோடு பொருந்த வேண்டுகையாலே. ஆகவே இவற்றால் ஆழ்வாரை எம்பெருமான் ஆத்மாவாக நினைத்திருக்கிறபடி தெரிகையாலே அவனுக்கு ஒரு துக்கம்வரப் பொறுக்கமாட்டாரென்பது தெளிவாயிற்று.

[எம்பெருமானுக்கே சிஷ்யலக்ஷண பூர்த்தியுண்டென்று நிரூபித்தல்.]

202. (ஆக, சேதநர்களுக்கும் ஸர்வேச்வரனுக்கும் பலகாலும் ஆழ்வார் உபதேசம் செய்வதற்கு ஹேதுக்கள் கீழே நிரூபிக்கப்பட்டனவாயின. ஆழ்வார் இங்ஙனே உபதேசிப்பராயினும் சிஷ்யலக்ஷண யோக்யதை யில்லாத எம்பெருமான் உபதேசத்திற்கு முக்கிய பாத்திரமன்றே என்கிற சங்கைக்கு இனி பரிஹாரம் செய்யப்படுகிறது. சிஷ்யலக்ஷண பூர்த்தியுள்ளது எம்பெருமானுக்கேயென்று நிரூபித்துக்காட்டி அவனே உபதேசஸத்பாத்ரமென்று நிகமிக்கப்படுகிறது.) நல்ல சிஷ்யன் ஆசார்ய விஷயத்தில் எவ்விதமாக நடந்துகொள்ள வேணுமோ அவ்விதமாகவே ஆழ்வார் விஷயத்தில் எம்பெருமான் நடந்து கொண்டதாக அருளிச்

பரிஜநாதிகளோடே தன்னைத்தந்து என்செய்வனென்றேயிருந்து அகில பாரத்தையும் ஸமர்ப்பிக்க அது சுமந்து அல்லுநன்பகலும் போகு என்

செயல்களினால் விளங்குகின்றது. ஸச்சிஷ்யனானவன் ஆசார்யனை அவனுக்கு அபிமதமானஸ்தலத்திலே வைத்து, அவனுடைய இஷ்டப்படி நடந்து, அவனுடைய திருமேனியிலே சிறந்த விருப்பமுடையனாயிருந்து, ஸகல ஸ்நேஹத்தையும் அவன் பக்கலிலே பண்ணி, வேறு விஷயங்களில் ஸங்கமற்று, தரித்ரன் செல்வம் பெற்றாற்போலேயும் பசியன் சோறு பெற்றாற்போலேயும் விடாய்த்தவன் தண்ணீர் பெற்றாற்போலேயும் மிகுந்த அபிநிவேசத்தோடே அவனை யநுபவித்து, தன் ஆத்மாத்மீயங்களை ஆசார்யனுக்கு ஸமர்ப்பித்து, எல்லாம் செய்தாலும் ஆசார்யன் பண்ணின மஹோபகாரத்துக்கு நேரல்லாமையாலே குறைவாளனாயிருந்து, ஆசார்யன் தன்னுடைய தேஹயாத்ரா பாரமெல்லாம் தன்மேலே பொகட்டிருக்கத் தான் அஃதடங்கலும் சுமந்து, அல்லும்பகலும் அவனைப் பிரியாதேயிருந்து, ஆசார்யன் நிக்ரஹித்துத் தள்ளினாலும் போகாதேயிருந்து, அவனுக்கு அநிஷ்டமானால் தனக்கு உகப்பானவற்றையும்விட்டு, ஆசார்யன் விதித்தபடியே நடத்துமவனாக இருக்கவேண்டுமென்பது அனைவருமறிந்த விஷயமாகும். ஆழ்வார் விஷயத்திலே எம்பெருமான் நடப்பதுமிப்படியே காண்மின்;—

எங்ஙனே யென்னில்;

"இருத்தும்வியந்து என்னைத்தன்பொன்னடிக்கீழ்" என்கிற பாசுரத்தின் படியே ஆழ்வாரை எம்பெருமான் இவர்க்கு அபிமதமானவிடத்திலே யிருத்தினானாயிற்று. "தண்டாமஞ்செய்து என்னெண்தானானே" என்கிற பாசுரத்தின் படியே ஆழ்வாருடைய இஷ்டப்ரகாரம் நடப்பவனாயிற்று "பொய்கலவாது என் மெய்கலந்தான்" என்று இவர் திருமேனியில் பண்ணின விருப்பத்தில் புரையின்றிக்கே "அந்தாமத்தன்பு செய்து" என்று பரமபதத்தில் பண்ணும் வ்யாமோஹத்தை இவர் பக்கலிலே பண்ணினானாயிற்று. "பற்றிலனீசனும்" என்று இவர் பக்கல் ஸங்கத்தாலே அங்குள்ளார் பக்கல் ஸங்கத்தையும் விட்டானாயிற்று. ஜந்மதரித்ரன் நிதிகண்டாப்போலேயும் பசித்தவன் சோறுகண்டாப்போலேயும் தாஹித்தவன் தண்ணீர் கண்டாப்போலேயும் மிகவும் அபிநிவேசத்தோடே இவரை அநுபவித்தானென்னுமிடம் "இருந்தான் கண்டுகொண்டு" "என்னை முற்றவும் தானுண்டான்" "தானென்னை முற்றப்பருகினான்" என்கிற பாசுரங்களிலே விளங்காநின்றது. தன்விபூதியையும் தன்னையும் இவர்க்குக் கொடுத்தானென்னுமிடம் "எனக்கே தன்னைத் தந்தகற்பகம்" என்ற பாசுரத்தில் விளங்காநின்றது. இவர்க்கு எல்லாஞ்செய்தாலும் ஒன்றுஞ்செய்யப் பெற்றிலேன் என்றே அவன் இழவாளனாயிருந்தானென்னுமிடம் "உன்னடியார்க்கு என் செய்வனென்றே யிருத்தி நீ" என்கிற பாசுரத்தில் விளங்காநின்றது. ஆத்மாத்மீயாவிஷ பாரத்தையும் [illegible] இவர் ஸமர்ப்பிக்க "வேங்கடத்துறைவார்க்கு நமவென்னலாங் கடமையது சுமந்தார்கட்கு" என்னும்படி [illegible] தனக்குக்

157928 சென்னை-600

லும் அகல்வானு மல்லனுய் போகே லென்றல் உகப்பையுந் தவிர்ந்து விதி வகையே நடத்துமவனே உபதேசஸத்பாத்ரம்.

நண்ணுதார் மெய்யிலூன் ஆசை நிர்வேதத்தோடே ஆஸ்திக்ய அமாநித்வாதிகள் விஞ்சின ப்ரணிபாதாபிவாதந பரிப்ரச்ந ஸேவாபரர்க்கு உளங்

கனத்துத் தோற்றுகையாலே அவ்வழியாலே அந்த அகில பாரத்தையும் சுமந்தானுயிற்று. இவர் பக்கல் பண்ணின ஸ்நேஹத்தாலே இரவும்பகலும் இவரைவிடமாட்டாதே யிருந்தமை "அல்லுநன்பகலுமிடை வீடின்றிநல்கி யென்னைவிடான்" என்ற பாசுரத்தினுல் விளங்கும். "போகுநம்பீ!" என்று சீறிப்போகச் சொன்னுலும் "அகல்வானுமல்லனினி" என்கிறபடியே விட்டு நீங்காமலிருந்தானுயிற்று. "ஆன்பின் போகேல்" என்று இவர் நிவர்த்திப்பித்தால் "திவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி" என்கிறபடியே தனக்கு உகப்பான அப்பசுநிரை மேய்க்கையையும் தவிர்ந்தானுயிற்று. "ஆழியானருள் தருவானமைகின்றன் அது நமது விதி வகையே" என்று இவர் விதிக்கிறபடியே நடத்துகிறவனுமாயிற்று. ஆக இப்படிகளாலே சிஷ்ய லக்ஷண பூர்த்தியுள்ளது எம்பெருமானுக்கே யாகையாலே இவனே உபதேசத்திற்கு ஸத்பாத்ரமென்றதாயிற்று.

[ஆழ்வார் ஸம்ஸாரிகளுக்கு உபதேசிப்பதற்கு ஹேதுக்கள் இன்னவையென்பது.]

203. (அறிவிலிகளான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கிறவளவில், விரக்தர்களாய் ஆத்ம குணங்கள் நிரம்பியவராய் அணுகிவந்து ஆதரத்தோடு அபேக்ஷிக்குமவர்களுக்கு உபதேசிக்கவேண்டிய அர்த்தங்களை, பகவத் விமுகர்களாய் ப்ரயோஜநாந்தரபரர்களாய் அநுவர்த்திப்பது மில்லாதவர்களான ஸம்ஸாரிகளுக்கு வலிய பிடித்து உபதேசிப்பானேன்? என்னில்; அதற்குக் காரணம் கூறப்படுகிறது.) * நண்ணுதார் முறுவலிப்ப * மெய்யில் வாழ்க்கை * ஊனேறு செல்வம் * வாய்ச் சென்றசிந்தை என்கிற பதிகங்களிற் சொல்லுகிறபடியே, பகவத் ... லோகயாத்ரையிலும் மாம்ஸாதிமலரூப தேஹத்திலும் தேஹாநுபந்திகளிலுமுண்டான தோஷங்களைக் கண்டு நிர்வேதம் பிறக்கவேணும்; "ஆஸ்திகோ தர்மசீலஶ்ச ஶீலவாந் வைஷ்ணவஶ்ஶுசி:। கம்பீரஶ்சதுரோ தீரஶ்ஶிஷ்ய இத்யபிதீயதே॥ [ஆஸ்திகோ தர்மசீலச் ச சீலவாந் வைஷ்ணவச் சுசி:, கம்பீரச் சதுரோ தீரச் சிஷ்ய இத்யபிதீயதே."] என்றும், "அமாநித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம்। ஆசார்யோபாஸநம் ஶௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ:—அமாநித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம், ஆசார்யோபாஸநம் சௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ:." என்றும் சொல்லப்படுகிற ஆஸ்திக்யம் முதலானவைகளும் அமாநித்வம் முதலானவைகளுமாகிற சிஷ்ய லக்ஷணமான ஆத்ம குணங்கள் நிரம்பியிருக்கவேண்டும்; "மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச—மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச"